www.padippakam.com

Chelliyan

# மார்க்சிச சர்வதேசியம் எதிர் தீவிர எதிர்ப்பு முன்னோக்கு

## Marxist internationalism vs. the perspective of radical protest

பூகோளமயமாக்கல் தொடர்பாக பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் விமர்சனத்திற்கு பதில்.

**A reply to Professor Chossudovsky's critique of globalization**

**By Nick Beams**
**21 February 2000**

பேராசிரியர் மைக்கல் சோசுடோவ்ஸ்கியால் எழுதப்பட்டு, உலக சோசலிச வலைத் தளத்தில் 15 தை 2000ல் பிரசுரிக்கப்பட்ட *"சியாட்டிலும் அதற்கு அப்பாலும்: புதிய உலக ஒழுங்கை பலவீனமாக்கல்"* என்ற கட்டுரைக்கு பதிலளிக்கும் முகமாக, உலக சோசலிச வலைத் தளத்தின் (WSWS) ஆசியர்குழு உறுப்பினரும் ஆஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியின் தேசிய செயலாளரும் ஆன நிக் பீம்ஸால் எழுதப்பட்ட கட்டுரையை உலக சோசலிச வலைத் தளம் இங்கே வெளியிடுகின்றது.)

கடந்த டிசம்பரில் சியாட்டிலில் உலக வர்த்தக அமைப்பின் (WTO) அதிகாரபூர்வ கூட்டம் தோல்வியடைந்தது இரு முக்கிய அம்சங்களின் முக்கிய அரசியல் நிகழ்ச்சியாகும். முதலில் புதியநூற்றாண்டிற்கான வர்த்தக சுற்று ஒன்றை ஏற்படுத்துதற்கான முயற்சிகளின் சீர்குலைவானது, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் ஆகிய பிரதான முதலாளித்துவ சக்திகளுக்கிடையிலான வர்த்தக மற்றும் நிதி மோதல்களின் புதிய கட்டத்தைக் குறிக்கிறது.

இரண்டாவதாக, 1960கள் மற்றும் 1970களில் வியட்நாம் யுத்தம் தொடர்பான அரசியல் எழுச்சிகளின் பெரும் நடவடிக்கைகளுப் பின்னர், கூட்டத்திற்கு வெளியே இடம்பெற்ற எதிர்ப்புகள் மற்றும் ஆர்பாட்டங்கள், அதிகரித்துவரும் சமூக துருவபடுத்தல்களின் விளைவாக அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதும் வளர்ந்து வருகின்ற வெடிப்புமிக்க சமூகப் பதட்டங்களை வெளிப்படுத்துகின்றன. அவை உழைக்கும் மக்களது வாழ்க்கை மற்றும் சமுதாயம் முழுமையும் மீதான நாடுகடந்த நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் மேலாதிக்கத்திற்கு எதிராக வளர்ந்துவரும் குரோதத்தை எதிரொலிக்கின்றன.

எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பின்னர், மிகத் தீர்க்கமான பிரச்சனை இந்நிகழ்வுகள் மீதான அரசியல் கணக்கெடுப்பினை தயாரிப்பதும், நம்முன்னுள்ள அரசியல் மற்றும் சமூகப் போராட்டங்களுக்கான முன்னோக்கினையும் வேலைத்திட்டத்தையும் அபிவிருத்திசெய்வதுமாகும். இதன் காரணமாக, பேராசிரியர் மைக்கேல் சோசுடோவ்ஸ்கியால் *"சியாட்டிலும் அதற்கு அப்பாலும்: புதிய உலகை ஒழுங்கை பலவீனமாக்கல்"* என்று தலைப்பிடப்பட்ட பங்களிப்பை நாம் வரவேற்றோம். அது உலக சோசலிச வலைத் தளத்தால் ஜனவரி 13ல் வெளியிடப்பட்டது.

பல ஆண்டுகளாக பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி, சர்வதேச நாணய நிதியம் (IMF) உலக வங்கி மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO) போன்றவற்றின் மூலம்



படிப்பகம்

www.padippakam.com

திணிக்கப்படும் நாடுகடந்த நிறுவனங்களின் "சுதந்திர சந்தை" திட்டத்தின் சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை அம்பலப்படுத்துவதில் முக்கிய வேலைகளை செய்துவருகிறார். குறிப்பாக எப்படி இந்த வேலைத்திட்டம் வளர்ந்துவரும் உலக வறுமைமைக்கு வழிவகுத்திருக்கிறது எனவும் மற்றும் 1994-ல் ருவாண்டாவில் இனப்படுகொலை போன்ற பேரழிவுகளுக்கும், முன்னாள் யூகோஸ்லாவியாவினை துண்டாடலால் உண்டு பண்ணப்பட்ட மோதல்களுக்கும் எப்படி வழிவகுத்திருக்கிறது என்றும் அவர் ஆழமாய் விளக்கியிருக்கிறார்.

முக்கியமாக, சேர்பியா மீதான நேட்டோ யுத்தத்தில் அவர் தெளிவான நிலைப்பாட்டை எடுத்திருந்தார். நடுத்தர வர்க்க தீவிரவாதத்தட்டினரின் பல பிரிவினர் கொசோவோ விடுதலை இராணுவத்தை [KLA] ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடும் "தேசிய விடுதலை" இயக்கம் என புகழ்பாடி, நேட்டோ யுத்தப் பிரச்சாரத்தின் பின் அணிவகுத்து நின்றதற்கும் எதிராக, அவர் கொசோவோ விடுதலை இராணுவத்தின் உண்மை இயல்பை அம்பலப்படுத்தினார்.

உலக வர்த்தக அமைப்பு தொடர்பான அவரது கட்டுரையில், பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி ஜனநாயகம், வெளிப்படைத் தன்மை மற்றும் பங்களிப்பு பற்றிய சொற்றொடர்களின் பின்னுள்ள பிரதான முதலாளித்துவ சக்திகளது அரசாங்கங்கள், வங்கிகள் மற்றும் பெரிய வர்த்தக அமைப்புகளது உண்மையான நிகழ்ச்சி நிரலை மறுபடியும் அம்பலப்படுத்தவிழைகிறார். ஆனால் இக்கட்டுரை முழுவதுமாக அடிப்படையிலேயே குழப்பத்தை ஏற்படுத்துவதால் உ.சோ.வ. தள ஆசிரியர் குழு 1999 நவம்பர் 30ல் வெளிவிட்ட அறிக்கையான "பூகோள முதலாளித்துவத்துக்கு எதிரான இயக்கத்துக்கு அரசியலே முதற்கோட்பாடு" என்பதில் எமது கவனத்தை இது தொடர்பாக செலுத்தியிருந்தோம்.

அதில் நாம் எழுதினோம்: "இன்றைய மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் பெரும்பாலும் ஒரே மாதிரியான அரசியல் விவாதத்தில், 'பூகோள முதலாளித்துவம்' மற்றும் 'பூகோளமயமாக்கல்' ஆகியன முக்கியமாக ஒரு கருத்தை குறிக்கும் வேறு சொற்களாக இருக்கின்றன". அது எவ்வாறாயினும், கணணி அறிவியல், தொலைத் தொடர்பு மற்றும் போக்குவரத்தில் புரட்சிகர முன்னேற்றத்தால் தூண்டிவிடப்பட்ட முற்போக்கு வளர்ச்சியான உற்பத்தி மற்றும் பொருட்களின் பரிவர்த்தனையின் அதிகரித்துவரும் பூகோளத்தன்மைக்கும், பூகோளமயமாக்கலில் இருந்து சமூகரீதியான அழிவுகரவிளைவுகள் தோன்றவில்லை, மாறாக பொருளாதாரவாழ்வை தனியார் லாபத்திற்கான அராஜக போட்டியினால் இயக்கப்படும் காலாவதியாகிப் போன தேசிய வடிவமான அரசியல் அமைப்புக்கு கீழ்ப்படுத்த முயலுவதற்க்கும் இடையிலான வித்தியாசத்தை எடுத்துக்காட்டுவது அவசியமாகும்.

இந்த ஆய்விலிருந்து எழும் அரசியல் முன்னோக்கு மற்றும் வேலைத்திட்டம் மீதான கேள்விக்களுக்கு விடையளிக்கும் முகமாக அறிக்கை பின்வருமாறு தொடர்ந்தது. "இன்று மாபெரும் கேள்வி என்னவெனில் இன்றைய அபிவிருத்தியை தனிமைப்படுத்தப்பட்ட தேசிய பொருளாதார வாழ்வின் பேரளவிலும் புராதன காலத்துக்கு பின்நோக்கிகொண்டு செல்வது பற்றியதல்ல. கேள்வி என்னவெனில்: யார் பூகோளப் பொருளாதாரத்தினை கட்டுப்படுத்தப் போகிறார்கள்?, யாருடைய நலன்கள் தீர்மானிக்கப்போகின்றன?, எப்படி அதனுடைய ஆழமான தொழில்நுட்ப மற்றும் கலாச்சார தகைமைகள் பயன்படுத்தப்படவிருக்கின்றன? என்பதுதான். பூகோள பொருளாதாரத்தை முற்போக்கான வகையில் ஒழுங்கமைக்கக்கூடிய ஒரே சமூக சக்தி சர்வதேச தொழிலாள வர்க்கம்தான்".

இதன் மீதான அடிப்படை விஷயங்களில்தான் உ. சோ. வ. தளத்தின் பார்வைக்கும் பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் பார்வைக்கும் இடையிலான வேறுபாடுகள் திரும்புகின்றன. முதலாளித்துவக் கொள்ளையிடலுக்கு சோசுடோவ்ஸ்கி ஒரு எதிரி என்பதில் கேள்விக்கு இடமில்லை. ஆனால் அவரது விமர்சனம் லாப அமைப்புக்கும் மற்றும் அது அடிப்படையாக கொண்டிருக்கும் சமூக உறவுகளுக்கும் மேல் செலுத்தப்படவில்லை,



படிப்பகம்

படிப்பகம்

மாறாக இன்னும் சொல்லப்போனால் பூகோளமயமாக்கல் போக்கின் மீது செலுத்தப்பட்டுள்ளது. அவர் அத்தியாவசியமாக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முந்தைய வடிவங்களை மீளமைக்க ஆதரவைத் தூண்டிவிடுகிறார்.

சுருங்கக் கூறின், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் அதன் உலக சோசலிச வலைத் தளத்தினதும் வேலைத்திட்டம் தொழிலாள வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதற்காகவும், சமுதாயத்தை சோசலிச வழியில் மறு ஒழுங்கமைப்பதற்குமான போராட்டத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இருக்கையில், சோசுடோவ்ஸ்கியின் வேலைத்திட்டம் முதலாளித்துவத்தின் முக்கிய அரசியல் இயங்கு முறைகளுள் ஒன்றான தேசிய அரசை பலப்படுத்தவும் அதற்கு மெருகூட்டவும் விரும்புபவர்களுக்கு ஒரு தத்துவார்த்த மேடையை வழங்குவதில் போய் முடிகிறது.

உலக சோசலிச வலைத் தளத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம், மனிதகுலம் முழுவதையும் ஒட்டுமொத்தமாக முன்னேற்றுவதற்காக நவீன பொருளாதாரத்தின் பூகோளத் தன்மையின் உற்பத்திப் பொருள் என்ற வகையில் சர்வதேசத் தொழிலாள வர்க்கம் பூகோளமயமாக்கப்பட்ட உற்பத்தி முறையின் அபரிமிதமான ஆற்றலைக் கட்டுப்படுத்துவதற்கான எதிர்கால தேவையையும் நோக்கமாக கொண்டது. இந்த முன்னோக்கிற்கு எதிராக, சோசுடோவ்ஸ்கி தனது பார்வையை சிறப்பானதென கூறப்படும் கடந்தகாலத்துக்கு திருப்பி, ஆரம்ப காலகட்டத்தில் முதலாளித்துவ ஆட்சிக்கு அடிப்படையாக அமைந்த கீன்சிய [Keynesian] பாணியிலான தேசியப் பொருளாதார ஒழுங்குபடுத்தல் மற்றும் சமூக சீர்த்திருத்தங்கள் ஆகியவற்றை மீளக் கொணர்வதற்காக அழைப்புவிடுக்கிறார்.

இன்று சாதாரணமாகக் காணப்படும் அரசியல் குழப்பத்தின் மத்தியில், இந்தக் கண்ணோட்டங்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் ஏதாவதொரு கோணத்தில் சியாட்டிலில் உள்ள உலக வர்த்தக அமைப்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் பெரும்பான்மையோரினதும் உலகம் முழுவதும் அவர்களது பிரச்சாரத்திற்கு ஆதரவாகவும் அதனைப் பின்பற்றவும் செய்த தனிநபர்கள் மற்றும் அமைப்புகளதும் கண்ணோட்டத்தை எதிரொலிக்கின்றது. அவை உ.சோ.வ தளத்தைப் பொறுத்தவரை சோசுடோவ்ஸ்கியின் கட்டுரைக்கு விளக்கமாகப் பதிலளிப்பதை மிக முக்கியமானதாக ஆக்கியது. இந்த கலந்துரையாடல் முக்கியமானது, ஏனென்றால் நமது கண்ணோட்டத்தில் பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டமும், ஆய்வும் பூகோள முதலாளித்துவத்திற்கு எதிராக வெளிப்படும் இயக்கத்தை எவ்வழியிலும் முன்னேற்றகரமாக கொண்டுசெல்லாது, மாறாக அதனைத் தடம்மாறச் செய்யும்.

பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் கண்ணோட்டத்தை ஆழமான ஆய்வுக்கும் விமர்சனத்துக்கும் உட்படுத்துவதில் எமது கலந்துரையாடல்களின் முடிவுகள் எவ்வளவுற்கு கூர்மையாக இருந்தாலும், இவை நமது காலத்தின் மிக முக்கியமான அரசியல் பிரச்சினைகள் எவை என்பதில் உண்மையான தெளிவைப்பெற விரும்புகிற அனைவராலும், சோசுடோவ்ஸ்கியாலும் வரவேற்கப்படும் என்பதில் நாம் நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

சோசுடோவ்ஸ்கியின்படி, சியாட்டிலில் "பெரும் பிளவு", "புதிய உலக ஒழுங்கினை உண்மையாய், எதிர்ப்பவர்களுக்கும் தோற்றத்திற்கு எல்லாவகையிலும் 'முற்போக்காக' இருப்பதாக தோற்றமளிக்கும் 'கூட்டு' ('partner') பொது அமைப்புகளுக்கும் இடையிலானதாகும். ஆனால் இக் கூட்டுஅமைப்புகள் உண்மையில் இந்தஅமைப்பு முறையின் படைப்புக்கள் மட்டுமல்லாது, புதிய ஒழுங்குக்கு எதிரான 'உண்மையான' சமூக இயக்கங்கள் இணைவதை உடைப்பதற்கு சேவை செய்பவர்கள்".

அரசுசாரா அமைப்புகள் என்றழைக்க கூடிய நிறுவனங்களை அரசு நிதி உதவி, அவற்றில் மேற்கத்திய உளவு நிறுவனங்களின் ஊடுருவல் மற்றும் உலக வர்த்தக அமைப்புக்காக "மனிதாபிமான முகத்தை" வழங்கும் அவர்களது பாத்திரம் பற்றி சிலமுக்கிய விஷயங்களை அவர் எழுப்புகிற அதேவேளையில், உண்மையான பிளவு



www.padippakam.com

வாங்கலையும், தங்களது அண்டை அயலாரின் வர்த்தகக் கொள்கைகளை சட்டத்திட்டங்களின் மூலம் தடுப்பதையும் நோக்கமாக கொண்டது.

எவ்வாறாயினும் யுத்தத்திற்கு பிந்தைய சகாப்தத்தில் பூகோள முதலாளித்துவப் பொருளாதாரத்தின் விரிவாக்கத்திற்கு வர்த்தகத்திற்கும் வரிக்குமான பொதுஉடன்படிக்கை (GATT) வகித்தபங்கு புதிய கேள்விகளை எழுப்பியுள்ளது. 1980களின் அளவில் வர்த்தகத்திற்கும் வரிக்குமான பொதுஉடன்படிக்கை கட்டமைப்பானது அபிவிருத்தியடைந்த பூகோள பொருளாதாரத்திற்கு மிகவும் குறுகியதாகிவிட்டது. அது உருவாகியபோது சர்வதேசப் பொருளாதார உறவுகள் தேசியப் பொருளாதாரங்களுக்கு இடையேயான வர்த்தக தொடர்புகள் மேலோங்கியிருந்த அந்த சகாப்தம் கடந்து போய்விட்டது. பூகோள உற்பத்தி முறைகளும், சேவையையும்,அறிவையும் அடிப்படையாகக் கொண்ட தொழிற்துறையின் வளர்ந்துவரும் முக்கியத்துவமும், சர்வதேச நிதி நிறுவனங்களின் அதிகரிக்கும் எதிர்பார்ப்புகளுடனும் சேர்ந்து அர்த்தப்படுத்துவது யாதெனில் அதிகரித்துவரும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் விவகாரங்களை ஒழுங்கமைக்க புதிய ஒழுங்குமுறை ஒன்று தேவையாக உள்ளது என்பதாகும்.

உ.வ. அமைப்பின் உருவாக்கம் பிரதான முதலாளித்துவ சக்திகளால் பூகோளமயமான உற்பத்திக்கும், போக்குவரத்து -தொலைத்தொடர்பில் ஏற்பட்ட புரட்சிகர அபிவிருத்திகளின் தேவைகளுக்கும் எழும் நிதிதேவைகளை பூர்த்தி செய்யவும், விஞ்ஞானரீதியான முன்னேற்றங்களைப் உற்பத்தி தொழில் நுட்பங்களுக்கு பயன்படுத்துவதால் உற்பத்தி சக்திகளில் பரந்த வளர்ச்சியை சாத்தியமாக பூகோளமயமாக்கலுக்கு பொருந்துகிறவாறு அமைப்பு ஒன்றை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சியைத்தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

முதலாளித்துவத்தின் கீழ் பூகோளமயமாக்கப்பட்ட உற்பத்தி உலகெங்கும் உள்ள உழைக்கும் மக்களைச் சுரண்டுவதை உக்கிரப்படுத்துவதற்கான வழிமுறைகள் தான் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை. அதன் விளைவு வளர்ச்சியடைந்த நாடுகளிலும் பின்தங்கியநாடுகளிலும் ஒரே மாதிரியாக பரந்த மக்களின் சமூக நிலைமைகளை மோசமடையச்செய்து வருகிறது. ஆரம்ப காலகட்டத்தில் அமைக்கப்பட்ட அனைத்து சமூக சீர்திருத்தங்களும் இலாபத்தை அதிகரிப்பதற்கும், தனது நடவடிக்கைகளுக்காக எல்லாத்தடைகளையும் அகற்றுவதற்குமான பூகோள மூலதனத்தின் தேவையின் தடையற்ற அழுத்தத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இது பூகோளமயமாக்கலை ஒரேயடியாய் எதிர்க்கப்படவேண்டும் என அர்த்தப்படுத்தவில்லை. முதலாளித்துவம் அதன் வரலாற்று அபிவிருத்தியில் ஒவ்வொரு கட்டத்திலும், எல்லாவற்றுக்கும் மேலாக இதன் இன்றைய வடிவத்திலும் வர்க்கச் சுரண்டலின் அமைப்பாகும். ஆனால் அதற்கும் மேலாக அது தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மூலமாகவும் சர்வதேச உழைப்புப் பிரிவினை மூலமாகவும் இவ்விரு வகையிலும் உற்பத்தி சக்திகளின் தொடர்ச்சியான அபிவிருத்தியுடன் தொடர்புடைய உற்பத்தி அமைப்பின் வடிவமுமாகும். இவ்விஷயங்களை கவனத்திற்கெடுக்கையிலேயே முன்னோக்கு தொடர்பான அடிப்படைக் கேள்விகள் எழுகின்றன.

இறுதி ஆய்வில், சமூகத்தின் அடிப்படை வர்க்க அமைப்பின் ஒரு குறிப்பிட்ட வடிவமல்ல. மாறாக இன்னும் சொல்லப்போனால் உற்பத்தி சக்திகளின் வரலாற்று அபிவிருத்திகளின் மேல்தான் வர்க்கங்கள் அமைகின்றன, வடிவம் எடுக்கின்றன, மீள்ஒழுங்கமைக்கப்படுகின்றன, அவற்றுக்கிடையிலான உறவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. தொழில்துறை முதலாளித்துவத்தின் தொடக்கத்தில் ஆலை உரிமையாளர்கள் மற்றும் நில உடைமையாளர்களின் வர்க்கத்தில் இருந்து இன்றைய உலகில் கால்பரப்பி நிற்கும் நிதி நிறுவனங்கள் மற்றும் பரந்த நாடு கடந்த நிறுவனங்கள் வரை, நவீன வரலாறு முழுவதும் உற்பத்தி சக்திகள் முதலாளித்துவ வர்க்கத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு அடிபணியச் செய்யப்பட்டன. ஆனால் உற்பத்தி சக்திகள் சொத்துடமை வர்க்கத்தின் பொருளாதார மேலாதிக்கத்திற்கான சாதனங்ள் என்பதனை விடவும் மேலானவை. மிகவும் அடிப்படையான மட்டத்தில் சமூக மற்றும் பொருளாதார



www.padippakam.com

போக்கின் சடத்துவரீதியான உள்ளடக்கத்தினை கொண்ட அவை மனிதகுலத்தின் பொருளாதார, தொழில் நுட்ப அபிவிருத்தியையும் உள்ளடக்கியுள்ளன.

உற்பத்தி சக்திகள் முதலாளித்துவத்தின் கீழ் சுரண்டுவதற்கான சாதனங்களாக சேவைசெய்யும் வேளையில், அவை அந்த சுரண்டலை இல்லாமல் செய்வதற்கானதும் மற்றும் முழு மனிதகுலத்தினையும் முன்னேற்றுவதற்கான சடத்துவ ரீதியான முன்நிபந்தனையையும் கொண்டுள்ளன. இந்த முரண்பாட்டின் மேல்த்தான் சோசுடோவ்ஸ்கியும் அவருக்குமுன் அவரைப் போன்ற ஏனைய பலரும் தடுமாறினர்.

புகழ் மிக்க *அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு முன்னுரை* என்பதில் மார்க்ஸ் உற்பத்தி சக்திகளுக்கும் சமூகத்தின் வர்க்க அமைப்புக்கும் இடையிலான சக்திமிக்க உறவை பின்வருமாறு விளக்குகிறார்: "அபிவிருத்தியின் குறிப்பிட்ட கட்டத்தில், சமுதாயத்தின் சடத்துவரீதியான உற்பத்தி சக்திகள் அப்போதுள்ள உற்பத்தி உறவுகளுடன் மோதலுக்கு வருகின்றன. -இது அதே விஷயத்தையே சட்டரீதியான வார்த்தைகளில் வெறுமனே விளக்குகிறது- அதாவது உற்பத்தி சக்திகள் இதுவரை அவை இயங்கிவந்த கட்டமைப்புக்குள்ளேயான உற்பத்தி உறவுகளுடன் மோதலுக்கு வருகின்றன. உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியின் வடிவங்களில் பார்க்கையில் இவ்வுறவுகள் அவற்றிற்கு தடையாக மாறிவிடுகின்றன. இதன் பின்னர் சமூகப் புரட்சிகளின் சகாப்தம் ஆரம்பமாகிறது".

உ.வ.அமைப்பின் உருவாக்கத்திற்கு பின்னர் காரணமாகிய பூகோளமயமான உற்பத்தியின் வரலாற்று முக்கியத்துவத்தை முதலாளித்துவ அபிவிருத்தியின் போக்கினை ஆளுமை செய்யும் நிகழ்ச்சிப் போக்குகளை ஆய்வு செய்வதன் ஊடாக மட்டுமே புரிந்து கொள்ளமுடியும். பூகோளமயமாக்கலானது மூலதனம் பொருத்தமான உபரிமதிப்பை பெற்றுக்கொள்ளவும், பெருப்பிக்கவும் வேண்டியநோக்கில் உருவாகிய சுரண்டலின் மேலதிகமான அபிவிருத்தி மட்டுமல்ல. அது அறிவியல் முன்னேற்றத்தையும் சர்வதேச உழைப்புப் பிரிவினையின் மேலதிக அபிவிருத்தியையும் ஈடுபடுத்துகின்ற உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியையும் கூட குறிக்கிறது. அதன் மூலம் மனிதகுல உழைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட இந்த உற்பத்தி சக்திகளுக்கும் தனிச் சொத்துடைமை மற்றும் தேசிய அரசுமுறை ஆகியவற்றின் மேல் தங்கியிருக்கின்ற முதலாளித்துவ சமூக உறவுகளுக்கும் இடையில் உள்ள முரண்பாட்டை உக்கிரப்படுத்தியுள்ளது.

இந்த தத்துவார்த்த கருதுகோள்கள் தொழிலாள வர்க்கத்துக்கான முன்னோக்கையும் வேலைத்திட்டத்தையும் உருவாக்குவதற்கான ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதன் தோற்ற காலத்திலிருந்து, தொழில்துறை முதலாளித்துவம் உற்பத்தி சக்திகளின் தொடர்ச்சியான புரட்சிகர மயப்படுத்தலை முன்னெடுத்ததனூடாக அதன் விளைவாக மார்க்சின் வார்த்தைகளில் சொல்வதெனில் "அனைத்து சமூக நிலைமைகளின் குறுக்கீடு செய்யப்படாத இடையூறுகளை", பழமையான போற்றுதலுக்குரிய தப்பெண்ணங்கள் மற்றும் கருத்துக்களுடன் இணைந்த அனைத்து நிலையான, உறுதியாகிபோன உறவுகளையும் அடித்துச்சென்றுவிட்டது".

இந்த தொடர்ச்சியான மாற்றங்கள் மற்றும் மோதலின் விளைவான சமூக எழுச்சிகளின் ஒவ்வொரு காலகட்டத்திலும் அடிப்படையில் எதிரெதிரான இரு அரசியல் போக்குகளின் தோற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் மாற்றங்களுக்கு மார்க்சிசப் போக்கின் பதிலானது இறுதி ஆய்வில், சமூக மாற்றத்திற்கான இயக்கு சக்தியை வடிவமைக்கின்ற உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியின் இயற்கை போக்கின்மீது எப்போதும் தன்னைஅடித்தளமாக கொண்டிருக்கும். அதாவது மார்க்சிசத்தின் பதிலானது உற்பத்தி சக்திகளுக்கும் முதலாளித்துவ சமூக உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை இம்மாற்றங்கள் எவ்வாறு உக்கிரப்படுத்துகின்றன என்பதனை ஆய்வு செய்வதும், அதன்மூலம் சர்வதேச

www.padippakam.com

தொழிலாளவர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் சோசலிசத்தை நிறுவுதற்கும் போராட்டத்தை முன்னெடுக்க பொருத்தமான வேலைத்திட்டத்தை வளர்த்தெடுப்பதாக இருக்கவேண்டும்.

இந்த அணுகுமுறையானது தொழிலாள வர்க்கம் வெறுமனே சுரண்டப்படும் வர்க்கம் அல்ல என்பதிலிருந்தும், அது முதலாளித்துவ அபிவிருத்தியாலேயே உருவாக்கப்பட்ட முழு சமூக சக்தியிலும் புரட்சிகரமான வர்க்கம் என்பதிலிருந்தும், உற்பத்தி சக்திகளை முதலாளித்துவ சமூக உறவுகளின் பிடிகளில் இருந்து விடுவித்து நாகரீக வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் என்று புரிந்து கொள்ளுவதை அடித்தளமாகக் கொள்ளவேண்டும்.

இந்த முன்னோக்கினை விரிவுபடுத்தலானது, இந்த சமூக நெருக்கடிக்கு பதில் பழைய ஒழுங்குக்கு திரும்புமாறு அழைப்புவிடுப்பதுதான் என குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பிரிவுகளாலும் முதலாளித்துவ வர்க்கத்தின் சிலபகுதிகளாலும்கூட முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் வேலைத்திட்டத்துக்கு எதிரான போராட்டத்தின் மூலமாகவே எப்போதும் இடம்பெறும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டனில் தொழிற்புரட்சியின் விளைவாக அஞ்சி நடுங்கி சுவிஸ் அரசியல் பொருளாதாரவாதி சிஸ்மோண்டி விவசாய அடிப்படையிலான கிராமப்புறப் பொருளாதாரத்தைத் தக்கவைக்குமாறு அழைப்புவிடுத்த காலத்திலிருந்து, முதலாளித்துவத்துக்கு எதிரான குட்டி முதலாளித்துவ பதிலானது இதே அடிப்படைப் பாதையைத்தான் பின்பற்றியது.

சில சமயங்களில் இரண்டாவது கைத்தொழிற்புரட்சி என அழைக்கப்பட்ட பாரிய அளவில் முதலாளித்துவ மற்றும் டிரஸ்ட்டுகளது இணைவுகளை கொண்ட பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் ஆரம்ப காலத்தை பண்பிட்டுக் காட்டிய சிறிய முதலாளித்துவ நிறுவனங்களுக்கு இடையிலான சுதந்திரமான போட்டிக்கு திரும்புமாறு அழைப்புவிட்டதைக் கண்டது. தற்போதும் இருபதாம் நூற்றாண்டின் முடிவில், பூகோளமயமான உற்பத்திக்கு இந்தப் போக்கினரின் பதிலானது, தேசியப் பொருளாதார ஒழுங்கமைப்பின் கொள்கைகளுக்கும், 1950 மற்றும் 1960களின் போருக்குப் பிந்தைய செழிப்பினைக் குறிக்கும் சமூக சீர்த்திருத்தத்துக்கும் திரும்புமாறு அழைப்பதாக இருக்கிறது.

சிஸ்மொண்டி முன்னணி தத்துவார்த்தப் பிரதிநிதியாக இருந்த குட்டி முதலாளித்துவ உருவாக்கங்களில் இப்போக்கின் தொடக்கத்தை மார்க்ஸ் மட்டுமே பார்த்த அதே வேளை, அவற்றின் அத்தியாவசிய அடிப்படைக் கண்ணோட்டம் பற்றிய மார்க்சின் ஆய்வானது அதன் பொருத்தமான தன்மை எதையும் இன்றும் இழந்துவிடவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் "இவ்வகைப்பட்ட சோசலிசம் நவீனப் பொருளுற்பத்தி உறவுகளிலுள்ள முரண்பாடுகளைக்கண்டு மிகுந்த மதிநுட்பத்துடன் அவற்றை விவரித்தது. பொருளியலாளர்களுடைய கபடமான நியாயவாதங்களை அது அம்பலப்படுத்திற்று. இயந்திரங்களும் உழைப்புப் பிரிவினையும் உண்டாக்கும் நாசகர விளைவுகளையும், மூலதனமும் நிலமும் ஒரு சிலரின் கைகளில் குவிவதையும், அபரிதமான உற்பத்தியையும் நெருக்கடிகளையும் அது மறுக்கமுடியாத வகையில் நிரூபித்துக் காட்டிற்று. குட்டிமுதலாளித்துவப் பகுதியோருக்கும் விவசாயிகளுக்கும் தவிர்க்க முடியாதவாறு ஏற்படும் அழிவையும், பாட்டாளி வர்க்கத்தின் கொடுந்துன்பத்தையும், பொருளுற்பத்தியில் நிலவும் அராஜகத்தையும், செல்வத்தின் வினியோகத்தில் ஏற்படும் படுமோசமான ஏற்றத் தாழ்வுகளையும், தேசங்களிடையிலான படுநாசமான தொழிற்துறைப் போரையும், பழைய ஒழுக்கநெறியும் பழைய குடும்ப உறவுகளும் பழைய தேசிய இனங்களும் குலைந்து செல்வதையும் அது எடுத்துரைத்தது.

ஆயினும் இவ்வகைப்பட்ட சோசலிசம் அதன் சாதகமான குறிக்கோள்களைப் பொறுத்தவரை, பழைய உற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்களையும் அவற்றுடன் கூடவே பழைய சொத்துடைமை உறவுகளையும் பழைய சமுதாயத்தையும் மீட்டமைக்கவே விரும்பிகிறது. அல்லது நவீன உற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்களை அவற்றால்



படிப்பகம்

www.padippakam.com

தகர்த்தெறியப்பட்டுள்ள, தகர்த்தெறியப்பட்டே ஆக வேண்டிய பழைய சொத்துடைமை உறவுகளின் கட்டுக்கோப்பினுள் இருத்தி வைத்து அடைத்திடவே விரும்புகிறது. இவை இரண்டில் எது அதன் விருப்பமாயினும், இவ்வகைப்பட்ட சோசலிசம் ஒருங்கே பிற்போக்கானதும் கற்பனாவாதத் தன்மையானதுமே ஆகும்." என மார்க்ஸ் எழுதுகின்றார்.

அவை எழுதப்பட்டு 150 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட போதும் பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் முக்கிய வழிமுறைகளையும் கண்ணோட்டத்தினையும் இந்த வரிகளில் அடங்கியுள்ளதை விடவும் தெளிவான, சுருக்கமான விளக்கமுடியாது.

பூகோள முதலாளித்துவத்தினது உலக வர்த்தக அமைப்பு (WTO) மற்றும் ஏனைய நிறுவனங்கள் தொடர்பான பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் அடிக்கடியான உணர்ச்சிவசப்பட்ட கண்டனங்கள் அனைத்தின் வழியாகவும் இழையோடிக் கிடப்பது ஒரு திட்டவட்டமான அரசியல் வேலைத்திட்டமாகும். அவரது கண்ணோட்டத்தில் உ. வ. அமைப்பு போன்ற "சர்வ அதிகாரங்கள்" கொண்ட அமைப்புக்களினால் கீழ்ப்படுத்தப்பட்டு இருக்கின்ற தேசிய அரசின் இறைமையையும் அதிகாரத்தையும் புனரமைப்பதன் மூலம் பூகோளமயமாக்கல் கட்டாயம் எதிர்க்கப்பட வேண்டும் என்பதாகும்.

சோசுடோவ்ஸ்கியின்படி, உ.வ.அமைப்பை நிறுவிய 1994 உடன்பாடு, "ஒவ்வொரு உறுப்பினர் நாடுகளதும் ஜனநாயக விதிமுறைகளைக் கடந்து சென்றுவிட்டது". அத்துடன், பூகோள வங்கிகளுக்கும், பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும் பேரளவு அதிகாரம் வழங்குவதன மூலமாக தேசிய சட்டங்களையும் அரசியலமைப்பு விதிமுறைகளையும் வேண்டுமென்றே சீரழிக்கின்றது.

அவர் பின்வருமாறு தொடர்கிறார் "வேறு வார்த்தைகளில் சொல்வதெனில், உருகுவே சுற்றின் இறுதி நடவடிக்கையை தொடர்ந்து உ.வ.அமைப்பு உருவாக்கப்பட்ட முறை அப்பட்டமான 'சட்டவிரோதம்' ஆகும். தேசிய அரசாங்கங்களின் இறைமையையும், உரிமைகளை சீரழிக்கும், ஒவ்வொரு நாட்டு மட்டத்தில் பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளை மேற்பார்வை செய்யும் சர்வதேச சட்டத்தின்கீழ் 'சர்வ அதிகாரங்கள்' கொண்ட அரசாங்கங்களுக்கிடையிலான அங்கம் என்று அழைக்கப்படும் ஒன்றை ஜெனிவாவில் தற்காலிகமாக நிறுவப்பட்டது.

"உ. வ. அமைப்புடனான தங்களது அரசாங்கங்களின் அங்கத்துவத்தை காலதாமதமின்றி திரும்பப்பெறவும், ரத்துச் செய்யவும் தங்களது அரசாங்களுக்கு அழுத்தம் கொடுக்கவும், "உ.வ.அமைப்பின் அங்கத்துவ நாடுகள் தேசிய அரசியல சட்டங்களையும் உள்நாட்டுச் சட்டங்களையும் அப்பட்டமாக மீறுவதைச் சுட்டிக்காட்டி, தேசிய நீதிமன்றங்களின் அவற்றுக்கெதிராக" சட்டரீதியான வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் அழுத்தம் கொடுப்பதற்கு, "உலகெங்கும் உள்ள மக்கள் இயக்கங்களுக்கு" சோசுடோவ்ஸ்கி அழைப்பு விடுகிறார்.

உண்மையை அம்பலப்படுத்தலையும் விமர்சன ரீதியான விவாதத்தையும் தடுப்பதற்காக வெகுஜன ஊடகங்களை சோசுடோவ்ஸ்கி கண்டனம் செய்கின்றார். அத்துடன், "சுதந்திர சந்தை" யின் ஒரே வாக்குறுதி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உ.வ.அமைப்பு ஆகியவற்றால் வழங்கப்பட்ட "கசப்பான பொருளாதார மருந்தால்" ஏற்ப்பட்ட பொருளாதாரச் சீரழிவுதான் மக்களது வாழ்க்கைத்தரத்தை அழிக்கின்றது என்று சுட்டிக்காட்டுகிறார். பின்னர் அவர் "நாம் கட்டாயம் உண்மையை மீட்கவேண்டும், நமது நாடுகளுக்கும் நமது நாட்டு மக்களுக்கும் இறைமையை மீண்டும் கட்டாயம் நிலைநாட்ட வேண்டும்" என பிரகடனம் செய்கிறார்:

பூகோள முதலாளித்துவத்துக்கும் அதன் நிறுவனங்களுக்கும் எதிரான தேசிய எல்லைகளைக் கடந்து சர்வதேச தொழிலாள வர்க்கத்தை ஒன்றிணைப்பதன் அடிப்படையிலான போராட்டமான சோசலிச கொள்கைகளை கொண்ட எதிர்ப்புக்கும், தேசிய அரசின் அதிகாரத்தை மீளமைக்க "மக்கள் இயக்கத்துக்கு" அழைப்பு விடுக்கும்


படிப்பகம்

www.padippakam.com

பூகோளமயமாக்கலுக்கு எதிரான குட்டி முதலாளித்துவ எதிர்ப்புக்கும் இடையிலான அடிப்படை வேறுபாட்டிற்கான தெளிவான விளக்கம் இதைவிட வேறெதுவும் இருக்க முடியாது.

இந்த பிரச்சனைகள் எவ்வகையிலும் தற்போது முதல்முறையாக வெளிப்படவில்லை. ஏகாதிபத்திய மையப்படுத்தலையும் தேசிய ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் எதிர்த்துப் போராடுகின்ற அதே வேளையில், "நமது கண்டம் முழுவதும் மட்டுமல்லாது மேலும் பூகோளம் முழுவதுமாக திட்டமிடப்பட்ட அமைப்பை நோக்கிய, நவீன, தடை செய்யமுடியாத மற்றும் ஆழமான பொருளாதார வாழ்க்கையின் போக்கின் வழியில் 'தேசியக் கொள்கையை' ஈடுபடுத்த பாட்டாளி வர்க்கம் அனுமதிக்கக் கூடாது", என்று ட்ரொட்ஸ்கி முதலாவது உலக யுத்தத்தின் மத்தியில் விளக்கினார்.

அவர் தொடர்ந்தார்: "நவீன பொருளாதாரம் முன்னர் வட்டார மற்றும் பிராந்திய எல்லைக்குள் சிறைப்பட்டுக் கிடந்ததுடன் தன்னைத்தானே கிழித்துக் கொண்டு வந்ததுபோல, குறுகிய தேசிய நோக்கின் பைத்தியக்காரதனத்திலிருந்து தன்னையே முற்று முழுதாகத் துண்டித்துக் கொண்ட இந்தப்போக்கின் முதலாளித்துவ கள்ள வெளிப்பாடுதான் ஏகாதிபத்தியம். ஏகாதிபத்திய வடிவிலான பொருளாதார மையப்படுத்தலுக்கு எதிராகப் போராடுகின்ற அதே வேளையில், அது ஒரு குறிப்பிட்ட போக்கு என்பதற்காகவே சோசலிசம் ஒரு போதும் அதை எதிர்ப்பதில்லை, மாறாக அந்தப் போக்கினை தனது சொந்த வழிகாட்டும் தத்துவமாக்குகின்றது".1

இந்த தொடரின் முடிவுப்பகுதியில் இந்த வழிகாட்டும் தத்துவத்தின் விளைபயன்களின் சிலவற்றை நாம் கவனிப்போம். இந்தக் கட்டத்தில் சோசுடோவ்ஸ்கியால் முன்னெடுக்கப்படும் தேசியவாத வேலைத்திட்டத்தின் விளைவுகளை நாம் ஆராய்வோம்.

பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் கண்டனங்களை வாசிக்கும்பொழுது உ. வ. அமைப்பு மற்றும் அவர் அழைக்கின்ற புதிய உலக ஒழுங்கு ஒருபோதும் பூகோள முதலாளித்துவ ஒழுங்கு அல்ல, இதேவேளை இது பற்றிய அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ள அதிவலதுசாரி தேசியவாதிகளின், மக்கள்வாத மற்றும் நவீன பாசிச அமைப்புக்களது பிரகடனங்களை கூட ஒருவர் நினைவு கூராமல் இருக்கமுடியாது.

அமெரிக்காவில், பட்ரிக் புக்கானனின் [Patrick Buchanan] ஆதரவாளர்களும் ஏனைய வலதுசாரி அரசியல்வாதிகளும் புதிய உலக ஒழுங்கு, உ.வ.அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றை "உலக அரசாங்கத்தின்" உறுப்புகள் என கூறி நிராகரித்து அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரங்களையும் இறைமை உரிமைகளையும் அழிவுக்கு ஆளாக்குகின்றன என்று கண்டனம் செய்கின்றனர். ஐரோப்பாவில் இதேபோன்ற நிலைப்பாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்ப்பாளர்களான வலதுசாரி மற்றும் நவீன பாசிசவாதிகள் மத்தியில் காணப்படுகின்றன. உ.வ.அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இவ்விரண்டையும் சோசலிஸ்டுகளும் எதிர்க்கிறார்கள் தான். ஆனால் இதில் தீர்க்கமான பிரச்சனை யாதெனில் அவ்வெதிர்ப்பு அடிப்படையாகக் கொண்டிருக்கும் வேலைத்திட்டமாகும்....

இந்த உள்ளடக்கத்தில் வெர்செயில்ஸ் உடன்படிக்கை [Versailles Treaty] தொடர்பான ட்ரொட்ஸ்கியின் நோக்கை நினைவு கூருதல் பயனுள்ளதாகும். கம்யூனிஸ்டு அகிலம் இந்த உடன்படிக்கையை முற்றாக எதிர்த்த அதேவேளை, ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி "வெர்செயில்ஸ் ஒழிக" என்று வெறுமனே முழக்கத்தை முன்னெடுக்க முடியாதிருந்தது. ஏனெனில் அவ்வாறு செய்வது அதனைத் தவிர்க்கமுடியாதபடி நாஜிகள் மற்றும் ஏனைய வலதுசாரிதேசியவாதக் குழுக்களின் அரசியலுடன் அணிசேர்த்துவிடும். இன்னும் சொல்லப்போனால், வெர்செயில்ஸ் மற்றும் அது அறிமுகப்படுத்தய "புதிய உலக ஒழுங்கு" ஆகியவற்றுக்கு எதிரான அரசியல் எதிர்ப்பை, ஐரோப்பிய ஐக்கிய சோசலிச அரசுகளுக்கான போராட்டத்தின் அடிப்படையில் அவர் நிலைநாட்டி வந்தார்.

படிப்பகம்

www.padippakam.com

சந்தேகத்துக்கிடமின்றி பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி, உ.வ.அமைப்பிற்கு எதிரான வலதுசாரி தேசிய எதிர்ப்பாளர்களுக்கு குரோதமானவர்தான். ஆனால் அரசியலில் அது ஒருவரின் விருப்பங்கள் பற்றிய பிரச்சனை அல்ல, மாறாக ஒருவர் போராடும் வேலைத்திட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் புறநிலை தர்க்கமும், அத்துடன் அந்த வேலைத்திட்டம் எந்த சமூகசக்திகளின் நலன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பதுமே முக்கியமாகும். உ. வ. அமைப்பிற்க்கான எதிர்ப்பானது, தேசிய அரசைப் பலப்படுத்தவும் அதன் அரச உரிமைகளை புனருத்தானம் செய்ய அழைப்பைவிடும் வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, அத்தேசிய அரசின் உரிமைகளை கீழ்ப்படுத்துவதால் உ. வ. அமைப்பு "சட்ட விரோதமானது" என்று கண்டனம் செய்வது வலதுசாரி தேசியவாத அரசியல் போக்குடன் அரசியல் அணிசேர்தலையே உருவாக்க முடியும்.

உ. வ. அமைப்பிற்க்கு "மனிதாபிமான முகத்தை" வழங்கியும் அதனுடைய ஜனநாயக பண்பில் பிரமைகளை ஊட்டியும் வருவதில் அரசு சாரா அமைப்புகள் மற்றும் செய்தி நிறுவனங்களின் பாத்திரத்தை பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி தனது கட்டுரை முழுவதும் அம்பலப்படுத்த விழைகிறார். ஆனால் தேசிய அரசு தொடர்பாக வருகையில் அவர் தானே பிரமைகளையும், கட்டுக்கதை புனைவதையும் ஊக்குவிக்கிறார்.

அவர் அரசு நிறுவனங்கள் தம்மை நிதிநிறுவனங்களின் பிடியில் இருந்து விடுவித்துக்கொள்ளவும் நேரடி உற்பத்தியாளர்களின் உரிமைகளை மீட்கவும் அரசு நிறுவனங்களின் மாற்றத்திற்கு அழைப்பு விடுக்கிறார். அவரது நோக்கம் தேசிய அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுக்கவும் இறுதியில், முதலாளித்துவ அரசின் சீர்திருத்தத்தை நிறைவேற்றவும் "மக்கள்" இயக்கத்தை வளர்த்தெடுப்பதுதான். ஆனால் வரலாற்று ஆதாரங்கள் அத்தகைய திட்டங்களின் சாத்தியமின்மையை எடுத்துக்காட்டுகின்றது.

முதலாளித்துவ தேசிய அரசு என்பது, சக்திமிக்க பொருளாதார நலன்களால் கைப்பற்றப்பட்டிருக்கும் சமுதாயத்துக்கு மேலாக நிற்கும் ஏதோவொரு நடுநிலையான அரசியல் நிறுவனம் அல்ல. அது முதலாளித்துவ வர்க்கத்தினை உருவாக்கியதும் அதன் அமைப்பும் ஆகும். இந்த அரசு பரந்த மக்கள் திரளால் எப்படியோ "கைப்பற்றப்" பட்டு அவர்களின் நலன்களின் பேரில் ஜனநாயகப்படுத்தப்பட முடியாமல் போனது.

இதன் கருத்து தொழிலாள வர்க்கமும் அதன் கூட்டணியும் ஜனநாயகக் கோரிக்கைகளுக்காகப் போராடக்கூடாது, அல்லது இதற்கான போராட்டத்திற்கு ஏனைய சமூக வர்க்கங்களிலிருந்து வென்றெடுக்க முடியாது என்று அர்த்தப்படவில்லை. மாறாக, பூகோள முதலாளித்துவ சந்தையின் சர்வ அதிகாரத்துக்கும் எதிரான போராட்டத்தில் ஜனநாயகக் கோரிக்கைகள் மிகமுக்கியத்துவத்தை பெறுவதுடன், பெறவும் முடியும். ஆனால், தொழிலாளர் இயக்கத்தின் அரசியல் போராட்டத்தின் முழு வரலாறும் காட்டுவதுபோல், அதனுடைய வடிவம் எப்படிப்பட்ட "ஜனநாயக" மானதாக இருந்தாலும் இந்தக் கோரிக்கைகளுக்கான போராட்டம் முதலாளித்துவ அரசினூடாக அல்லாது அதற்கு எதிரான போராட்டத்தினூடாகத்தான் மேற்கொண்டு முன்செல்லமுடியும்

பூகோள "சுதந்திர சந்தை" யின் நடவடிக்கையால் இப்பொழுது உண்டுபண்ணப்பட்டிருக்கும் சமூக மற்றும் பொருளாதார சீரழிவுக்கு காரணம் மூலதனம் இலாபத்திற்கான அதன் பூகோளப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடும் தேவைக்காக சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சமும் மூலதனத்தின் தேவைகளுக்கு கீழ்ப்படுத்தப்படுகின்றதாலாகும். இதற்கான தீர்வு பொருளாதாரத்தை மேலிருந்து கீழாக மறு ஒழுங்குசெய்வதும் மற்றும் பரந்த பெரும்பான்மையினரது தேவைகளை நிறைவுசெய்ய விஞ்ஞான மற்றும் கலாச்சார முன்னேற்றங்களின் பயன்படுத்தல்களின் அடிப்படையில் முற்றிலும் புதிய சமூக முன்னுரிமைகளை நிறுவுதலை தவிர குறைவான எதையும் வேண்டி நிற்கவில்லை.

ஆனால், பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி சந்தேகத்திற்கிடம் இன்றி ஒத்துக்கொள்ளும் முன்னோக்கான முதலாளித்துவ அரசின் மூலம் அது அடையப்பட முடியுமா? அதற்கு



படிப்பகம்

www.padippakam.com

பரந்த ஜனத்திரள் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தும் புதிய வடிவிலான அமைப்பின் உருவாக்கத்தையும் அரசியல் அமைப்புமுறையை முழுவதுமாக மாற்றி அமைப்பதையும் தனது இலக்காகக் கொண்டுள்ள ஒரு அரசியல் இயக்கம் தேவையில்லையா? இதற்கு எதிரான அனைத்தும் நிச்சயமாக பிரமைகளை உண்டுபண்ணுவதும், உ. வ. அமைப்பின் ஆதரவாளர்களால் ஊட்டி வளர்க்கப்பட்டு வருபவை போல அதே அளவு ஆபத்தானதுமாகும்.

பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் முன்னோக்கின் ஒருங்கிணைந்த உள்ளடக்கம் "சுதந்திர-சந்தை" நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட சமூக மற்றும் பொருளாதாரச் சீரழிவு தடுக்கப்படுவதற்கு, தேசிய அரசாங்கங்களுக்கும் அவற்றின் நிதி நிறுவனங்களுக்கும் தேசிய பொருளாதார ஒழுங்குமுறை கொள்கைகளுக்குத் திரும்புமாறு நிர்ப்பந்தித்து அழுத்தம் கொண்டு வந்தால் முடியும் என்ற அவரது நம்பிக்கைதான். இது போருக்குப் பிந்தைய செழுமையைப் பண்பிட்டுக்காட்டும் தேசிய பொருளாதார ஒழுங்கமைப்புக் கொள்கைகளின் மூலதாரியான பிரித்தானிய பொருளாதார வாதியான ஜான் மேனார்ட் கெயின்சின் [John Maynard Keynes] ஆய்வை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அனைத்து கெயின்சியனிச ஆதரவாளர்களைப் போலவே சோசுடோவ்ஸ்கியும் முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியின் ஊற்றிற்கு பொருளாதார தேவையின் [Economic demand] பற்றாக்குறையை காரணம் காட்டுகின்றார்.

இதை மிகத் தெளிவாக அவரது புத்தகமான "வறுமையின் பூகோளமயமாக்கல்" என்பதில் நிலைநிறுத்துகிறார். சர்வதேச நாணநிதியத்தினால் உதவி வழங்கப்படும் சீர்த்திருத்த திட்டங்கள் வேலையின்மையை உருவாக்கலும், "உற்பத்தி செலவைக்குறைத்தல்" போன்றவற்றால் உலக மக்கள் தொகையின் பெரும் பகுதியினரின் ஏழ்மைக்கு வழிவகுக்கும் மற்றும் "கொள்வனவுசெய்யும் சக்தியை பாரியளவில் சுருங்கச் செய்யும்" என எழுதுகிறார்.

"வளர்ந்த மற்றும் வளர்ந்துவரும் நாடுகளில் முறையே, குறைந்த மட்டத்திலான வருவாய்கள் உற்பத்தியில் தாக்குதலை ஏற்படுத்தி மேலும் தொடர்ச்சியான ஆலை மூடல்களுக்கும் திவால்களுக்கும் வழியமைக்கின்றன. இந்த நெருக்கடியின் ஒவ்வொரு நிலையின் இயக்கமானது பூகோளரீதியான மிகை உற்பத்தியையும் நுகர்வோர் தேவையின் வீழ்ச்சியையும் நோக்கியிருக்கும். சமூகத்தின் நுகர்வதற்கான தகமையின் குறைவு மூலம், உலகரீதியில் பிரயோகிக்கப்படும் உலகரீதியான பொருளாதார [Macro-economic] சீர்த்திருத்தங்கள் இறுதியில் மூலதனம் பெருகுவதற்கு தடையாகிறது."2

முதலாளித்துவ நெருக்கடியின் இத்தகைய ஆய்விலிருந்து திட்டவட்டமான அரசியல் முடிவுகள் ஊற்றெடுக்கின்றன என்பது தெளிவாகிறது. பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி நிலைநாட்டுகிறவாறு, பூகோள நிதி நிறுவனங்களால் திணிக்கப்படும் வேலைத்திட்டம் இறுதியில் மூலதனம் விரிவடைய தடையாக இருந்தால், அங்கே அப்பொழுது இந்தக் கொள்கைகளை பின்நோக்கி திருப்பும் நோக்கம் கொண்ட அரசியல் இயக்கம் வளர்வது சாத்தியப்படும். அத்தகைய பின்நோக்கிய திருப்பம் இறுதி விளைவாக மூலதனத்திற்கே நன்மை விளைக்கும் அரசியல் இயக்கம் வளர்வதை சாத்தியப்படுத்தும்.

எவ்வாறாயினும், நாம் எடுத்துக்காட்டப் போவதுபோல், இலாப முறைக்குள் இருக்கும் முரண்பாடுகளால் எழும் நெருக்கடிகளும், தேவையின் பற்றாக்குறையும் தவறான கொள்கைகளின் விளைபொருள் அல்ல. மாறாக அது மிக அடிப்படையான போக்குகளின் வெளிப்பாடாகும். அப்படியானால், தேவையினை விரிவடையச்செய்வதன் அடிப்படையிலான சீர்திருத்த வேலைத்திட்டம் அதனைத் தீர்க்காது என்பது தெளிவு.

சோசுடோவ்ஸ்கி "வாங்கும் திறனையும் ('தேவைப்பகுதி'), உலகரீதியான வேலைவாய்ப்பின் உருவாக்கத்தையும், வறுமையைக் குறைக்கும் உலகரீதியான கொள்கைகளை விரிவாக



படிப்பகம்

www.padippakam.com

அடங்கிய புதுச் சட்டங்கள் மூலம் வர்த்தகத்தை ஆளுமைசெய்ய அழைப்பு விடுக்கின்றார்.3.

1998-ல் வெளியிடப்பட்ட, நிதியுத்தம் எனத் தலைப்பிடப்பட்ட கட்டுரையில், அவர் முன்னெடுக்கின்ற வேலைத்திட்டத்தை தெளிவாய் விளக்குகிறார்: "போருக்குப் பிந்தைய காலகட்டத்தை அடுத்து பிரதான முதலாளித்துவ சக்திகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, கொள்கைகளுக்குத் திரும்பவேண்டும், அவற்றை பூகோள அளவில் பயன்படுத்தவேண்டும்".4.

அவர் எழுதுகிறார், "உலக ரீதியான நெருக்கடி மத்தியப்படுத்தப்பட்ட வங்கிமுறை அழிதலைக்குறிக்கின்றது. அதன் பொருள் தேசியப் பொருளாதார இறைமையின் குறைவும், சமுதாயத்தின் சார்பில் பணம் உருவாக்கப்படுவதைக் ? கட்டுப்படுத்த தேசிய அரசால் இயலாமல் போனமையும் ஆகும்".

அவர் நிற்கின்ற அறிவியல் மற்றும் அரசியல் மரபுகள் இறுதிப்பந்தியில் வெளிக்காட்டப்படுகிறது.

சோசுடோவ்ஸ்கி எழுதுகிறார்: "தற்போதுள்ள நிதிநெருக்கடியானது உலகெங்கும் உள்ள தேசிய அரசு நிறுவனங்களின் அழிவை மட்டும் உண்டுபண்ணவில்லை, 1944-ல் பிரெட்டன் ஊட்ஸ் [Bretton Woods] மாநாட்டில் நிறுவன முன்னோடிகளால் ஏற்படுத்தப்பட்ட போருக்குப் பிந்தைய நிறுவனங்களின் படிப்படியான சிதறுண்டுபோதலையும் (மற்றும் தனியார்மய சாத்தியத்தினை) கூட கொண்டிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய அழிவுகரப் பாத்திரத்திற்கு மாறாக இந்த நிறுவனங்கள் அவற்றின் வடிவமைத்தவர்களால் தேசியப் பொருளாதாரங்களின் உறுதிப்பாட்டைப் பாதுகாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. (1944 ஜூலை 22) மாநாட்டுக்கு தனது முடிவுரையில், அமெரிக்க திறைசேரி செயலாளர் ஹென்றி மோர்கென்த்தா [Henry Morgenthau] பின்வருமாறு கூறினார்: "தற்போதைய யுத்தத்திற்கு கொண்டு சென்ற 'பணமதிப்பிறக்கப் போட்டி மற்றும் வர்த்தகத்திற்கு அழிவுகரமான முதுகுக்குப் பின்னான வேலைகள் போன்ற இப்பொருளாதாரத் தீமைகளை ஒழிக்கும் வழிமுறைகளை வகுப்பதற்கு நாம் இங்கு வந்துள்ளோம்".

தேசிய பொருளாதார ஒழுங்கமைப்பின் கொள்கைகளுக்குத் திரும்புமாறு இதேபோன்று அழைப்புவிடுக்கும், பூகோள அமைப்பு முறையின் ஏனைய அநேக விமர்சகர்களைப் போலவே சோசுடோவ்ஸ்கி கெயின்சியன் பாணி நிர்வாகத்தினை அடிப்படையாகக் கொண்ட போருக்குப் பிந்தைய பொருளாதார ஒழுங்கு ஏன் முதல் தடவை உடைந்துபோனது என்ற கேள்விக்கு ஒருபோதும் பதிலளிக்கவில்லை.

இதுவரை அத்தகைய விமர்சகர்களால் வழங்கப்படும் எந்த விளக்கமும் போல, அது றேகன் மற்றும் தாட்சரால் முன்முயற்சி எடுக்கப்பட்ட கொள்கை மாற்றத்திற்கும் "சுதந்திர சந்தை" தத்துவத்தின் தோற்றத்தினையும் வழக்கம்போல காரணம் காட்டுவதாக இருக்கும். அத்தகைய ஆய்வு எவ்வாறாயினும் றேகன் மற்றும் தாட்சர் போன்ற சிறிய மற்றும் மிகக் குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட தனிநபர்கள் எப்படி "உலக வரலாற்று மனிதர்களாக" உருமாற்றம் செய்யப்பட்டார்கள் என்றோ, அல்லது 1960களில் பொருளாதார கிறுக்கன் ஆக குறிப்பிடப்பட்ட சிக்காகோ "சுதந்திரச் சந்தை" பள்ளியின் தந்தை மில்டன் பிரீட்மேன் [Milton Friedman] 1980 களில் பொருளாதார அறிவுடைமையின் ஊற்று என குறிப்பிடப்பட்டார் என்றோ விளக்க முடியாது.

"சுதந்திர சந்தையின்" தோற்றத்திற்கான வேலைத்திட்டத்தினை யுத்தத்திற்கு பிந்திய பொருளாதார ஒழுங்கின் நெருக்கடி, அபிவிருத்தி, அதன் தோற்றம் ஆகியவற்றை ஆய்விற்கு உட்படுத்துவதன் மூலமே விளங்கிக்கொள்ள முடியும்.

பிரெட்டன் வூட்ஸ் உடன்படிக்கையை உருவாக்கவும், மற்றும் அதனை அடுத்த ஆண்டுகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட கொள்கைகள் முதலாவதாக யுத்தத்தின் கடைசிக்



படிப்பகம்

காலகட்டத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் காலனித்துவ நாடுகளிலும் ஒரேமாதிரியாக வளர்ச்சியடைந்த மக்கட்திரளின் உள்ளுறைந்த புரட்சிகர இயக்கத்திற்கு பதில் ஆகும்.

முதலாளித்துவ வர்க்கத்தின் மிகவும் தொலைநோக்கு கொண்ட அரசியல் பிரதிநிதிகள் மூலதனத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் மற்றும் வாழ்க்கைத் தரங்களை பொதுவில் அபிவிருத்தியடையச் செய்வதை உறுதிப்படுத்தும் வரிசைக் கிரமமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் தாம் வரிசையாய் எழுச்சிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை உணர்ந்தனர். அவை முதல் உலக யுத்தத்தைத் தொடர்ந்து வந்ததைவிடவும் பரந்த அளவிலாய் எழுவதும் சாத்தியம் என்பதை உணர்ந்தனர். வேறுவிதமாகச் சொன்னால், இரு உலக யுத்தங்களுக்கும் மாபெரும் வீழ்ச்சி எனும் பொருளாதார அழிவுக்கும் பிறகு, முதலாளித்துவ பொருளாதாரம் மேலிருந்து திரும்பக்கட்டி அமைக்கப்படாவிட்டால், அங்கு கீழிருந்து அதனைத் தூக்கி வீசும் உண்மையான ஆபத்து உள்ளது என்பது உணரப்பட்டது.

சுதந்திரச் சந்தையின் தங்கு தடையற்ற நடவடிக்கைகளின் சமூக மற்றும் அரசியல் விளைபயன்கள் பற்றிய பீதியே பிரெட்டன் ஊட்ஸ் அமைப்பின் பிரதான உள்ளடக்கமாகும். அதற்கான நடவடிக்கைகளாக நிலையான நாணய உறவுகளை உருவாக்கல், மூலதனக் கட்டுப்பாடுகள், தேசியப் பொருளாதாரத்தினை கட்டுவதற்காக அரசாங்கங்ஙளை தூண்டுதல், மற்றும் பரந்த சமூக நல நடவடிக்கைகளை அமைத்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. இவை யுத்தத்திற்கு பின்னான விரிவாக்கத்திற்கான கட்டமைப்பை வழங்கின.

ஆனால் இந்தக் கொள்கை முன் முயற்சிகள் முக்கியமானவையாக இருந்தும், அவைதாமாகவே வெற்றி பெறமுடியவில்லை. முதலாளித்துவத்தின் வரலாற்றில் நீண்ட செழிப்பான காலப்பகுதியான -யுத்தத்திற்கு பின்னான விரிவாக்கத்தின் அடிப்படைக்காரணம் 1920-களிலும் 1930-களிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும், அங்கிருந்து ஏனைய வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் அபிவிருத்தியடைந்த ஒன்றிணைக்கும் தொழிற்பிரிவு [Assemble line] முறையை அடிப்படையாகக் கொண்ட புதிய முதலாளித்துவ உற்பத்தி வழிமுறையின் விஸ்தரிப்பாகும். இந்த புதிய உற்பத்தி முறைகளும் அவற்றுக்கு இணைந்துபோகும் அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பின் நிறுவலும் இலாப வீதங்களை மீட்டமைத்தலை சாத்தியமாக்கின.

இறுதி ஆய்வில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நீண்ட எழுச்சிக் காலப்பகுதியானது அது அரசாங்கக் கொள்கைகளால் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் அல்லது தடுக்கப்பட்டிருக்கலாம், அதன் விளைவு இலாபங்களின் விரிவாக்கம் ஆகும். அதிகரித்த இலாபங்கள் அதிகரித்த முதலீடுகளுக்கு வழிவகுத்தன. அவை மேலும் விரிவாக்கம் இடம்பெறும் வண்ணம் முறையே கூடுதல் வேலைவாய்ப்புகளையும், நுகர்வோர் தேவைகளின் விரிவாக்கத்திற்கும், புதிய சந்தைகளின் உருவாக்கத்திற்கும் வழிவகுத்தன.

இந்த ஒழுங்கான வட்டம் தொடர்கின்ற வரை, வர்த்தக சுழற்சியில் ஏற்ற இறக்கங்கள் இருந்த போதும் முதலாளித்துவப் பொருளாதாரம் தொடர்ந்து விரிவடைந்தது. ஆனால் மார்க்ஸ் ஆய்வு செய்தவாறு இலாப முறைக்கும், மூலதனம் திரள்வதற்கும் உள்ளே அடிப்படை முரண்பாடுகள் இருக்கின்றன. அதன் அர்த்தம் சில நிலைமையில் அது கட்டாயம் உடையும்.

இறுதி ஆய்வில், முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குள்ளே இலாபத்திற்கான முற்றுமுழு ஊற்று தொழிலாள வர்க்கத்தின் உயிருள்ள உழைப்பிலிருந்து உபரி மதிப்பு கறந்தெடுக்கப்படுவதில் தான் இருக்கிறது. ஆனால் இலாப வீதங்கள் முதலீடுசெய்யப்பட்டுள்ள மொத்த மூலதனத்துடன் தொடர்புடையன. அதாவது மூலப்பொருட்களிலும், இயந்திரத்திலும் முதலிடப்பட்டுள்ள மூலதனத்துடனும் (மாறா மூலதனம்), உழைப்புச் சக்தியின் மீது முதலிடப்பட்டுள்ள மூலதனத்துடனும் (மாறும் மூலதனம்) ஆகும்.



படிப்பகம்

மாறும் மூலதனம் உபரி மதிப்பிற்கான முழு ஆதாரமாக இருக்கும் வரையில், இந்த உபரி மதிப்பு என்றுமில்லா அளவு மொத்த மூலதனத்தை (மாறும் மற்றும் மாறா மூலதனத்தை) அதிகரிக்கும். முதலாளித்துவ உற்பத்தியை மிக விரிவடையச் செய்யும் இம் மூலதனத்திரட்சி இலாப வீதத்தில் ஒரு போக்கினைத் தூண்டும். அது மொத்தமாக இடப்பட்டுள்ள மூலதனத்துக்கும் மொத்த உபரி மதிப்புக்கும் இடையேயுள்ள விகிதாசாரம் வீழ்ச்சியடைவதாகும். இந்த நிகழ்ச்சிப் போக்கின் தோற்றமானது நெருக்கடிக்கே வழிவகுக்கும்.

இவ்வாறாக நெருக்கடியின் மத்தியில் இருப்பது தேவையின் பற்றாக்குறை அல்ல மாறாக இலாபங்களின் பற்றாக்குறையே தான், அல்லது இன்னும் குறிப்பாகச் சொன்னால் முந்தைய வீதத்தில் மூலதனம் தொடர்ச்சியாக விரிவடைவதற்கு இலாபங்கள் போதுமான அளவு இல்லாமை தான்.

இலாபவீத வீழ்ச்சிப்போக்கு 1960 களின் முடிவில் எடுத்துக்காட்டப்பட்டது. இதனைத்தொடர்ந்து 1970 களில் ஒரு தொடர் பொருளாதார, நிதிநெருக்கடிகள் உருவாகியதுடன் நிலையான நாணயமாற்றுக்கான பிரெட்டன் ஊட்ஸ் நிதியமைப்பை இல்லாதொழித்தது. இது 1974-75 இல் யுத்தகாலத்தின் பாரிய வீழ்ச்சியின் பின்னர் ஆழமான பின்னடைவை உருவாக்கியது.

இது இரண்டு முக்கிய விளைவுகளை உருவாக்கியது. முதலாவதாக, முன்னைய காலத்தில் தொழிலாள வர்க்கத்திற்கு வழங்க கடமைப்பட்ட சமூகநல நிலைமைகளை அரசாங்கங்கள் இல்லாதொழிக்க தொடங்கின. இரண்டாவதாக, இலாபவீத வீழ்ச்சியிலிருந்து மீழ்வதற்காக பூகோளமயமான உற்பத்திமுறை அபிவிருத்தியை அடித்தளமாக கொண்ட மறுசீரமைப்பு போக்கை மூலதனம் ஊக்குவித்ததுடன், கணணி தொழில்நுட்பத்தையும் பிரயோகிக்க தொடங்கியது.

இந்த நெருக்கடிகளை ஆராய்வது முதலாளித்துவ வர்க்கத்தின் எந்தவொரு பிரிவோ அல்லது முழுமுதலாளித்துவ வர்க்கத்தாலோ யுத்தத்திற்க்கு பின்னரான காலகட்டத்தால் குறிப்பிடப்பட்ட தேவையின் பெருக்கத்திற்கும், சமூகநல சலுகைகளுக்குமான கொள்கைகளுக்கு ஏன் திரும்பமுடியமல்போனது என்பதற்கான சாத்தியமின்னையை வெளிப்படுத்துகின்றது. சம்பளத்தினதும், சமூகநல நடவடிக்கைகளது ஒவ்வொரு அதிகரிப்பும் தேவையின் அளவை கூட்டும் என்பது நிச்சயம். ஆனால் இது இலாபத்தின் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தாததுடன், மொத்த மூலதனத்தின் அளவிற்கு ஏற்கனவே இலாபம் பொருத்தமற்றதாக இருக்கும் நிலைமையிலும் கூட இப்படியான நடவடிக்கைகள் நெருக்கடியை தீவிரமாக்கும்.

இது தொடர்பான இன்னுமொரு அரசியல் காரணம் கவனத்திற்கு எடுக்கப்படவேண்டியுள்ளது. சோசுடோவ்ஸ்கி "சுதந்திர சந்தை" யின் விளைவிற்கு எதிரான போராட்டம் "பரந்த அடித்தளத்திலும், எல்லா நாடுகளிலும் உள்ள பாரிய தாக்குதலுக்குரிய தொழிலாளர்கள், விவசாயிகள், சுயாதீன உற்பத்தியாளர்கள், சிறியவியாபாரிகள், உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், கல்விமான்கள், மத பிரதிநிதிகள், மாணவர்கள், புத்திஜீவிகளை கொண்ட சமூகத்தின் சகல மட்டத்திலுள்ள சகலபிரிவினரையும் ஜனநாயகரீதியாக உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்" என வலியுறுத்துகின்றார்.

பூகோள முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் தொழிலாள வர்க்கம் ஏனைய வர்க்கங்களினதும், நெருக்கமான சமூகதட்டினரதும் ஆதரவை பெற முயற்சிக்கவேண்டும் என்பது தொடர்பாக ஐயமெதுவும் இல்லை. ஆனால் கடந்த 25 வருட அரசியல் வரலாறு ஏன் இப்படியான ஒரு இயக்கம் கெயின்சிய வாத தேசிய ஒழுங்கமைப்புக்கு கொள்கைகளுக்கு திரும்பும் அடித்தளத்தில் உருவாக்கமுடியாது என்பதை எடுத்துக்காட்டியுள்ளது. கெயின்சியவாத முன்னோக்கினை சாதகமாக்கிய பொருளாதார நிலைமைகள் அதாவது 1970 களில் வீழ்ச்சிகண்ட இலாப குவிப்பின் அதிகரிப்பும்,

www.padippakam.com

முதலீடும், இதனை அரசாங்க பற்றாக்குறையை அதிகரிக்க செய்வதன் மூலமாகவும் உயர் வரிகளினூடாகவும் நிலைத்திருக்க வைக்க முயல்வது பணவீக்கத்தின் அதிகரிப்பினை உருவாக்குவதுடன் பரந்த மத்தியதர வர்க்கத்தினரிடயே ஆழ்ந்த மனக்கசப்பை உருவாக்குவதிலேயை சென்றுமுடியும். சமூக சீர்திருத்தத்தின் தோல்வியின் மீதான அரசியல் எதிர்ப்புணர்வு எதிர்மாறாக றேகன் தாட்சர் அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கான அரசியல் அடித்தளத்தை உருவாக்கும்.

"சுதந்திர சந்தை" முன்னோக்கினால் தொடர்ந்த அனுபவங்கள் அதன் அறிமுகத்துடன் இணைந்த நப்பாசைகளையும் இல்லாதொழித்துள்ளது. இது இம்முன்னோக்கினால் ஒருகாலத்தில் கவரப்பட்ட மத்தியதர வர்க்கத்தினர் உட்பட சமுதாயத்தின் சகலபிரிவினரிடையேயும் ஆழ்ந்த நெருக்கடியை உருவாக்கியுள்ளது. ஆனால் அதிகரித்த வகையில் விலகிசென்றுகொண்டிருக்கும் மத்தியதர வர்க்கத்தினரை கடந்த காலத்திற்குரிய தோல்வியடைந்த தேசிய சீர்திருத்தவாத முன்னோக்கின் அடித்தளத்தில் தொழிலாள வர்க்கத்தை நோக்கி வென்றுகொள்ள முடியாது.

மத்தியதர வர்க்கத்தினரையும் ஏனைய நெருக்கமான சமூகத் தட்டினரையும் தொழிலாள வர்க்கம் வென்றுகொள்ள, இலாப அமைப்பினை சீர்திருத்தும் நோக்கத்தை கொண்டிராத அதற்கு எதிரான முன்நோக்கினை முன்வைக்க வேண்டும். தொழிலாள வர்க்கம் முழு சமுதாயத்தினது உடல், மூளை உழைப்பினால் உருவாக்கப்பட்ட பாரிய உற்பத்திச் சக்திகளை தனிச்சொத்து நலன்களுக்கான ஆழுமையிலிருந்து விடுவித்து சமுதாயத்தின் சொத்துக்களாக்கி அதன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டும். அது சொல்லிலும் செயலிலும் சமுதாயத்தை புதிய சமூகநோக்கில் மறுஒழுங்கு செய்வதன் தேவையை தவிர வேறொன்றும் இல்லை என்பதை வலியுறுத்தவேண்டும்.

பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி சரியாக கூறுவதுபோல், "பூகோளமயமாக்கல்", "சுதந்திர சந்தை" அமைப்பிற்கு எதிரான போராட்டத்திற்கு "உயர்ந்தளவு ஒற்றுமையும், உலக வரலாற்றில் முன்னுதாரணம் காட்டமுடியாதளவு சர்வதேசிய வாதமும் தேவை". ஆனால் இங்குதான் அவரது முன்நோக்கின் அடிப்படை பிழை உள்ளது. அந்த அளவிலான சர்வதேசியவாதம் "எமது நாடுகளின் இறைமையை நிலைநாட்டுவதன்" ஊடாக அடையமுடியாது.

இப்பிரச்சனைக்கான உண்மையான அடிப்படை உலகம் எதிர் எதிரானதும், போட்டி தேசிய அரசுகளுக்கிடையே அரசியல் பிளவடைந்திருப்பதே. தேசிய இறைமையை மீளமைக்க முயலும் எந்தவொரு முன்நோக்கும் அதாவது தனது எதிராளிகளுக்கும், போட்டியாளர்களுக்கும் எதிராக ஒரு நாட்டின் உரிமையை வலியுறுத்துவது தவிர்க்கமுடியாதவாறு சர்வதேச ஒற்றுமையின் வளர்ச்சிக்கும், தேவையான "பூகோளமயமான" போராட்டத்திற்கும் தடையாகவே இருக்கும். மேலும் தேசிய இறைமையை வலியுறுத்துவதும், தேசிய சட்டங்களை திறமையானதாக்க முன்னுரிமை வழங்குவதும் புதிய ஏகாதிபத்திய யுத்தத்திற்கான தயாரிப்பாகும்.

சோசுடோவ்ஸ்கி கூறுவது போல், யுத்தமும் பூகோளமயமாக்கலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதுடன், யுத்தம் பற்றிய அபாயத்தை விளங்கிக்கொள்ளவும் வேண்டும். இது தொடர்பாக எவ்வித கருத்துவேறுபாடுமில்லை. ஆனால் இதனால்தான் தேசிய அரசையும், அதன் தேசிய இறைமையையும் அடிப்படையாக கொண்ட முன்நோக்கு முக்கியமாக எதிர்க்கப்படவேண்டும். இப்படியான ஒரு முன்நோக்கு யுத்தத்தை நடாத்துவதற்கான அரசியல், தத்துவார்த்த நிபந்தனைகளை உருவாக்க உதவியளிக்கின்றது. சோசுடோவ்ஸ்கி நேட்டோவை இல்லாமல் செய்யவும், ஆயுத தொழிற்சாலையை கலைக்கவும் அழைப்பு விடுக்கையில், ஒருபக்கம் இன்னொரு நாட்டின் இறைமையை உறுதிப்படுத்தவும் பாதுகாக்கவும் அழைப்பு விட்டுக்கொண்டு மறுகரையில் "தனது" ஒருநாட்டின் யுத்தத்திற்கான திட்டங்களை எதிர்ப்பது சாத்தியமல்ல.



படிப்பகம்

www.padippakam.com

சர்வதேசிய வாதம் வெறும் நல்லுணர்வுக்குரிய கட்டாயமானதல்ல. அதற்கு அவசியமானது, தேசிய வாதத்தின் தன்மையை இல்லாமல் செய்வதாகும். இது உலக மக்களின் தலைவிதி தேசிய அரசுடன் பிணைக்கப்பட்டிருக்கவில்லை என்பதன் அடித்தளத்தில் ஆதாரமாக கொண்டுள்ளதுடன், தனியார் சொத்துடமையின் கட்டமைப்பான தேசியஅரசு மனிதசமுதாயத்தின் உயர்வளர்ச்சிக்கு முக்கிய தடையாக மாறியுள்ளதுடன், அது ஓர் உயர்ந்த பொருளாதார, சமூக, அரசியல் அமைப்பினால் மாற்றீடு செய்யப்படவேண்டும் என்பதாகும்.

முன்னோக்கி செல்வதற்கான பாதை சோசுடோவ்ஸ்கி வழிமொழிவது போல் தேசியவாத அடுப்படிக்கு செல்வதல்ல, மாறாக உலக சோசலிசத்திற்கான அபிவிருத்திக்காக போராடுவதாகும். இப்பதிலின் அடுத்துவரும் பகுதியில் பூகோள முதலாளித்துவத்தினுள் இயங்கும் போக்கினால் எவ்வாறு இப்போராட்டம் தயார்படுத்தப்படுகின்றது என ஆராய்வோம்

பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின்படி, உலக வர்த்தக அமைப்புக்கும் (WTO) பூகோள முதலாளித்துவத்தின் ஏனைய நிறுவனங்களுக்கும் எதிராக வளர்கின்ற இயக்கம் இந்த பொருளாதார முறையை கைகழுவி விடுவதையும் அதன் நிறுவனங்களைக் கலைத்துவிடுவதையும் நோக்கி கட்டாயம் இயக்கப்பட வேண்டும்.

இந்தக் கட்டுரையின் முதல் இரண்டு பகுதிகளில் நாம் ஏற்கனவே விளக்கியவாறு, சோசுடோவ்ஸ்கியைப் பொறுத்தமட்டில் இதன் பொருள், தற்போதைய பொருளாதார ஒழுங்கு கட்டாயமாக நிராகரிக்கப்பட வேண்டும் மற்றும் சமுதாயமானது தேசிய அரசு பெரிய அளவில் பொருளாதாரத்தின் மீது ஆளுமையை செலுத்திய முந்தைய வளர்ச்சிக் கட்டத்திற்குத் திரும்பவேண்டும் என்பதாகும். இந்த அடிப்படைப் பிரச்சினையின் மீதுதான் நமது வேறுபாடுகள் மையம் கொண்டுள்ளன.

சோசுடோவ்ஸ்கியின் அணுகு முறைக்கு மாறாக, பரந்த மக்கள் திரளுக்கான வேலைத்திட்டம் மற்றும் முன்னோக்கின் வளர்ச்சியானது, இடம் பெற்றிருக்கிற பரந்த பொருளாதார மாற்றங்களை சர்வ சாதாரணமாய் நிராகரித்தல் மூலம் முன்னெடுக்கப்பட முடியாது. இன்னும் சொல்லப்போனால், உற்பத்தி பூகோள மயமாக்கலில் சம்பந்தப்பட்ட சமூக மற்றும் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளும் பூகோள நிதி அமைப்பின் வளர்ச்சியும் கட்டாயமாக விமர்சன ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். எனவேதான் மனித சமுதாயத்தின் வரலாற்று வளர்ச்சி நிலையிலிருந்து அவற்றின் முக்கியத்துவம் புரிந்துகொள்ளப்பட முடியும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பூகோள மயமாக்கப்பட்ட உற்பத்தி முறையின் பகுத்தறிவு ரீதியான பருப்பினை, தற்போது அதனை மூடியிருக்கும் சமூக மற்றும் பொருளாதார வடிவங்களில் இருந்து தோண்டி எடுப்பதற்கு அது தேவையானதாகும்.

பூகோள முதலாளித்துவத்தின் நெருக்கடி, தேசிய அரசின் இறையாண்மையையும் பொருளாதார அதிகாரத்தையும் பாதுகாப்பதற்கான கோரிக்கைகளை முன்னெடுத்து வருவது இதுதான் முதல் தடவை அல்ல. 1930களில் மாபெரும் பொருளாதாரத் தாழ்வின் போது அத்தகைய நிலைப்பாடுகள் பொதுவாக இருந்தன. அந்த நேரத்தில் இந்நிலைப்பாடுகளை ஆய்வு செய்கையில் லியோன் ட்ரொட்ஸ்கி இந்தப் பிரச்சனையை மனித சமுதாயத்தின் முழு அபிவிருத்தி மற்றும் அதன் பரிணாமத்தை ஆளுமை செய்யும் விதிகளின் உள்ளடக்கத்துக்குள் வைத்தார்.

அவர் எழுதினார்: "மிகச்சிறிய உழைப்பினைக் கொடுத்து மிகப்பெரிய அளவு பொருட்களை அடையக்கூடிய தூண்டலால் மனிதகுலமானது அதன் வரலாற்று விடியலில் இயங்க நிர்பந்திக்கப்பட்டுள்ளது. கலாச்சார வளர்ச்சிக்கான இந்த சடரீதியான அடித்தளமானது, மிகவும் ஆழமான பார்வையையும் கூட வழங்குகிறது. அதன் மூலம் நாம் சமூக ஆட்சிகளையும் அரசியல் வேலைத்திட்டத்தையும் கணிப்பீடு செய்யலாம். எந்திரவியல் உலகில் புவி ஈர்ப்பு விதி எவ்வளவு முக்கியத்துவம் உடையதோ //



படிப்பகம்

www.padippakam.com

அதேபோல மனித சமுதாய உலகில் உழைப்பின் உற்பத்தித்திறன் அதே அளவு முக்கியத்துவம் உடையது. விளைகின்ற சமுதாய வடிவங்களின் மறைவு, இந்த கொடுமையான விதியின் வெளிப்பாடுதான். இந்த விதிதான் மனிதனை மனிதன் சாப்பிடுவதன் மீது அடிமைத்தனத்தின் வெற்றியையும் அடிமைத்தனத்தின் மீது பண்ணை அடிமைகளின் வெற்றியையும் பண்ணை அடிமைகளின் மீது வாடகைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் வெற்றியையும் தீர்மானித்தது. உழைப்பின் உற்பத்தித்திறன் விதியானது தனது வழியை நேராகக் கண்டு கொள்ளாது மாறாக முரண்பாடான வகைகளில், தனது வழியில் எதிர்ப்படும் பூகோள மற்றும் மனித உடற்கூறு மற்றும் சமூகத் தடைகளை வெடித்தெழும் விசைகளாலும் திடீர் தடைகளாலும் மற்றும் பாய்ச்சல்களாலும் வளைவு சுழிவுகளாலும் கடந்து வரும். இங்கெல்லாம் வரலாற்றில் பல்வேறு 'விதிவிலக்குகள்' இருக்கின்றன. அவை உண்மையில் விதியின் குறிப்பிட்ட விலகலாக இருக்கும்." (1)

இந்த நிலைப்பாட்டிலிருந்துதான் ட்ரொட்ஸ்கி, தேசிய அரசு முறையின் மட்டுப்படுத்தப்பட்ட குறுகிய பாதைக்குள் ஏதோ ஒருவகையில் பலவந்தமாய் திருப்பி அனுப்புவதற்கான பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளுக்கான அழைப்பை அணுகுகிறார்: "புதிய தொழில் நுட்பத்திற்கு பொருளாதார மற்றும் சமுதாய உறவுகளின் தளத்தை எப்படிப் பொருத்துவது என்ற முற்போக்குப்பணி தலைகீழாக மாறிவிட்டது மற்றும் அது பழைய தேசிய தளத்திற்கும் பழைய சமூக உறவுகளுக்கும் பொருந்துகிறாற்போல் உற்பத்தி சக்திகளை எப்படித் தடுப்பது மற்றும் எப்படி வெட்டுவது பற்றிய பிரச்சனையாகவும் தெரிகிறது." (2)

ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டதற்கான நிகழ்ச்சிப் போக்குகள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக அளவிட முடியா வகையில் வளர்ந்துள்ளன. இது தொடர்பாக எண்ணிப்பார்க்குங்கால் நாடுகடந்த நிறுவனங்களின் உருவாக்கம் 1930களில் மட்டும் வெளிப்படத் தொடங்கியிருந்தது, அதுவும் பிரதானமாக எண்ணெய் தொழிற்துறையில் மட்டும் தான், ஆனால் இப்போது அது உற்பத்தியின் ஒவ்வொரு வடிவத்திலும் மேலாதிக்கம் செய்கிறது. இன்றைய உலகில் இருக்கின்ற மிகப் பெரிய 100 பொருளாதார நிறுவனங்கள் பற்றிய அண்மைய மதிப்பீடுகளின்படி, பாதியளவு நாடுகடந்த நிறுவனங்கள், மேலும் அந்த எண்ணிக்கை கடந்த ஆண்டில் இடம்பெற்ற இணைப்பு அலையில் இன்னும் அதிகரிக்கலாம். இந்த உண்மை மட்டுமே தேசிய அரசுக்கு பொருளாதார இறையாண்மையை மீட்டுவிக்கும் சோசுடோவ்ஸ்கியின் வேலைத்திட்டத்தின் படுசாத்தியமின்மையை எடுத்துக்காட்டுகிறது.

நாடு கடந்த நிறுவனங்களின் வளர்ச்சியும் பொருளாதார வடிவங்களின் அதன் மேலாதிக்கமும் உழைப்பின் உற்பத்தித் திறன் பற்றிய விதியின் வெளிப்பாடாகும். இந்த அமைப்புகளின் தோற்றம் வெறுமனே தேசிய அரசு மற்றும் தேசிய நிறுவனங்களின் உயர் வளர்ச்சியை மட்டும் குறிப்பிடவில்லை, அது பொருளாதார மற்றும் சமூக அமைப்புகளின் புதிய மற்றும் உயர் வடிவங்களையும் கூட சுட்டிக்காட்டுகிறது.

இங்கு "சுதந்திர சந்தை" க்கு வக்காலத்து வாங்குவோர், நனவு பூர்வமான திட்டமிடலினை அடிப்படையாகக் கொண்ட சோசலிச பொருளாதார அமைப்பின் சாத்தியம் பற்றிய அவர்களின் முடிவற்ற கண்டங்களுடன் அவர்களால் உண்டு பண்ணப்பட்ட தத்துவவியல் குழப்பத்தை ஊடுருவ வேண்டியது அவசியமானதாகும். சாராம்சத்தில் நாடுகடந்த நிறுவனங்களின் தோற்றமானது, முதலாளித்துவ சமூக உறவுகளின் அமைப்புக்குள்ளே முதலாளித்துவ சந்தையின் அழிவுப்போக்குகளால் விளையும் அராஜகத்தையும் வீணாக்கலையும் வென்று செல்ல விழையும் முற்சியைத்தவிர வேறொன்றுமில்லை.

நாடு கடந்த நிறுவனங்களுக்குள்ளே செயல்பாட்டிற்கான அடிப்படை, உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கினை நனவுபூர்வமான திட்டமிடலுக்கும் கட்டுப்பாட்டிற்கும் கீழ் கொண்டு வருவதற்கான தொடர்ச்சியான முயற்சியாகும். சமுதாயம் ஒட்டு மொத்தத்தின் உள்ளேயும் சமூக உறவுகள் சந்தையின் அராஜகத்தால் மேலாதிக்கம் செய்யப்படுகின்றன என்பது



படிப்பகம்

www.padippakam.com

நடக்கும் நிகழ்வுதான் என்றாலும் கூட, நாடுகடந்த நிறுவனங்களின் வளர்ச்சியானது இந்த அராஜகத்தை வெற்றிகொள்ள முடியாது. இன்னும் சொல்லப்போனால் இந்த நிகழ்ச்சிப் போக்கானது, முதலாளித்துவ சந்தையின் சமுதாய ரீதியில் அழிவுகரமான மற்றும் அராஜகப் போக்குகளை இன்னும் அதிக அளவில் குவிப்பதற்கே வழிவகுக்கிறது. இருப்பினும் இதனை எதிர்க்காமல், நாடு கடந்த நிறுவனம் உழைப்பின் உற்பத்தித் திறனை அபிவிருந்தி செய்ய தொடர்ச்சியான ஓட்டத்தில் ஒரு முயற்சியை, பொருளாதார நடவடிக்கையை நனவு பூர்வமான கட்டுப்பாட்டிற்கு கீழ்கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியைக் குறிக்கிறது.

அறுபதாண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட தனது அலசி ஆராய்ந்த கட்டுரையில் நோபல் பரிசு வென்ற பொருளாதார வல்லுநர் ரொனால்ட் ஹெ ச். கோஸ், "நிறுவனத்தின் சிறப்பு முத்திரை விலை செயல்பாட்டு முறையை நசுக்குவதுதான்" என்று சுட்டிக்காட்டினார். சந்தையின் கோளத்திற்குள்ளே (கார்பரேஷன்) நிறுவனங்கள் தங்கள் நடவடிக்கைகளைச் செய்கின்றன. மற்றும் இறுதியில் அதனால் மேலாதிக்கம் செய்யப்படுகின்றன. ஆனால் அவை, ஒரு வாளி மோரில் அதிக அளவு வெண்ணெய் திரளுவதுபோல இந்த நனவற்ற கூட்டுறவின் கடலில் நனவான சக்தியின் தீவுகள்" போல் அவ்வாறு செய்கின்றன. (3)

கடந்த நூற்றாண்டின் முடிவில் தேசிய ஏகபோகங்களின் உருவாக்கத்திலிருந்து நாடுகடந்த கம்பெனிகளின் உருவாக்கம் மற்றும் இப்பொழுது நாடுகடந்த பகாசுர நிறுவனங்களின் இணைப்பு இயக்கம் வரை, குழுமங்களின் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் சம்பந்தப்பட்டிருப்பது கண்ணுக்குத்தெரியாத சந்தையின் கையை கண்ணுக்குத் தெரிகின்ற திட்டமிடலின் கையால் பதிலீடு செய்வதற்கான முயற்சியாகும். அதேபோக்குத்தான் இப்போது பொருளாதாரத்தின் அனைத்துப் பகுதிகளினூடாகவும் அடித்துச் செல்லும் தொழில் நுட்ப மாற்றங்களில் காணப்படுகிறது. தகவல் தொழில் நுட்பவியல் என்று அழைக்கப்படுவதன் நோக்கம் இருக்கின்ற குழுமத்துக்குள்ளே உடனடி உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கினை மிக நனவு பூர்வமானதாகச் செய்வது மட்டுமல்லாமல், பல்வேறு கிளைகளின், பல்வேறு நிறுவனங்களினதும் செயல்பாடுகளையும் கூட, அவை அடுத்தடுத்து ஒன்றை ஒன்று அமைந்திருந்தாலும் சரி அல்லது உலகின் மறுபக்கத்தில் அமைந்திருந்தாலும் சரி அவற்றின் செயல்பாடுகளை என்று மிராத அளவு இன்னும் நெருக்கமாக ஒருங்கிணைப்பதற்கும் ஆகும்.

இந்த வரலாற்று நிலைப்பாட்டில், இருந்து நோக்குகையில், பூகோள மயமாக்கப்பட்ட உற்பத்தியின் முக்கியத்துவம் முதலாளித்துவ கட்டமைப்புக்குள்ளே திட்டமிட்ட சோசலிச பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கான சடரீதியான முன் நிபந்தனைகளின் பக்குவத்தை அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதுதான்.

உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளை நாடுகள் மற்றும் கண்டங்களைக் கடந்து கடைசிக் கோடிவரை ஒழுங்கமைக்க முடியும் என்றால், சரக்குகள் மற்றும் பணிகளின் இயக்கத்தை, விசும்பையும் காலத்தையும் தழுவி ஊசிமுனையளவு துல்லியமாய் தீர்மானிக்க முடியும் என்றால், பூகோளப் பொருளாதாரத்தை உலக மக்களின் தேவைகளை நிறைவு செய்வது சடரீதியாக சாத்தியம் என்பதில் அங்கு கேள்விக்கே இடமில்லை. சுருங்கச் சொன்னால் "சுதந்திர சந்தையாளர்" களின் வாதம், திட்டமிடப்பட்ட சோசலிசப் பொருளாதாரம் என்பது சிக்கலான முடிவெடுக்கும் நிகழ்ச்சிப் போக்கின் காரணமாக பண்புரீதியாக முடியாது, ஆகையால், சந்தை மற்றும் இலாப முறை தாக்குப்பிடிக்கும் சமூக அமைப்பின் வடிவத்தை மட்டுமே கொண்டிருக்கும், முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குள்ளேயே உள்ள அபிவிருத்தியினால் நடைமுறையில் அதுவும் மறுதலிக்கப்படும் என்பது ஆகும்.

அதே வேளையில், முதலாளித்துவ சமூக உறவுகளின் அமைப்புக்குள்ளே, அனைத்து பொருளாதார நடவடிக்கையும் இலாப வேட்கைக்குக் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பரந்த தொழில் நுட்ப மாற்றங்கள் அவசியமான அளவு. பரந்த மக்கட் திரளினது வாழ்க்கைத்



படிப்பகம்

www.padippakam.com

தரங்களைத் தொடர்ச்சியாக சீரழிப்பதில் விளைவை ஏற்படுத்தும் மற்றும் சமூக துருவப்படுத்தலின் வளர்ச்சியையும் -ஒரு துருவத்தில் நம்ப முடியாத அளவு செல்வக் குவிப்பையும் மற்றொரு துருவத்தில் அதன் சமூக நோய் நொடிகளுடனும் சேர்த்து அதிகரித்த துன்பத்தினையும் விளைவிக்கும்.

இந்த நெருக்கடிக்குத் தீர்வானது, கற்பனவாத தேசியப் பொருளாதார இறையாண்மைக்கு சாதகமாக பூகோளமயமாக்கலினை நிராகரிப்பதில் இல்லை, மாறாக முதலாளித்துவத்தின் காலத்திற·கொவ்வாத சமூக உறவுகளினால் திணிக்கப்படும் கசக்கிப்பிழிதல்களில் இருந்து உற்பத்திச் சக்திகளை விடுவிப்பதில்தான் இருக்கிறது. அத்தகைய இயக்கத்திற்கான சமூக மற்றும் அரசியல் அடிப்படை தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஐக்கியமாகும். புதிய தொழில் நுட்பங்களின் விளைவின் கீழ் தொழிலாள வர்க்கம் "காணாதுபோய்விட்டது" என்று சாதிப்பவர்களின் குற்றச்சாட்டுகளுக்கு மாறாக, உண்மையில் அது மொத்தமாகவும் ஒப்பீட்டு ரீதியிலும் பெருகியுள்ளது.

உலகில் ஒரு சில பத்தாண்டுகளுக்கு முன்னர் தொழிற்சாலைகள் உண்டாக்கப்பட்ட பிராந்தியங்களில், உற்பத்தியின் பூகோளமயமாக்கலானது பல கோடிக்கணக்கான தொழிலாளர்களைத் தோற்றுவித்துள்ளது. முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களில் இருந்த உழைப்பின் பழைய வடிவங்களை அவை மறையச் செய்தது போலவே, முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் உழைப்பின் பழைய வடிவங்களில் பெரும்பான்மையானவை மறைந்துவிட்டன. ஆனால் தொழில்நுட்பத்திறன் கண்டுபிடிப்புக்களுடன் தொடர்புடைய பொருளாதார மாற்றங்கள் அர்த்தப்படுத்துவது யாதெனில், மக்கட் தொகையின் பலபகுதிகள், முதலாளித்துவ ஆட்சியின் ஸ்திரத்தன்மை சார்ந்திருந்த ஒரு சமயம் நடுத்தர வர்க்கமாகக் கருதப்பட்டவை கூட, சக்திமிக்க வகையில் பாட்டாளி வர்க்க மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தான்.

இந்த நிகழ்ச்சிப் போக்குகளின் விளைவு, மனிதகுல வரலாற்றில் முதன் முறையாக உலக மக்களில் பெரும்பான்மையினர் தங்களின் உழைப்புச் சக்தியைத்தவிர விற்பதற்கு வேறு எதுவும் இல்லாத பாட்டாளி வர்க்கத்தினர் ஆகியதுதான்.

உலகின் ஒவ்வொரு பகுதியிலும், தேசியப் பொருளாதார வாழ்க்கையில் குறிப்பிட்ட வேறுபாடுகள் என்னவாக இருப்பினும், உழைக்கும் மக்களின் பரந்த மக்கட் திரளினர் தங்களின் சமூக நிலைமைகள் அதே பூகோள பொருளாதார முறையின் நடவடிக்கையால் சீரழிந்துள்ளது என்பதைக் காண்கின்றனர். ஒருங்கிணைந்த பூகோள முதலாளித்துவப் பொருளாதாரமானது, அவர்களின் தேசிய மூலம் எதுவாக இருப்பினும் செல்வந்தத்தட்டினருக்கும் மக்கட்தொகையின் பரந்த மக்கட் திரளுக்கும் இடையில் பிரிவாக - பூகோள ரீதியில் துருவமுனைப்படுத்தப்பட்ட சமுதாயத்தைத் தோன்றச் செய்திருக்கிறது.

பூகோள மயமாக்கலின் விளைவு ஏற்கனவே சமூக எழுச்சிகளை விளைவித்துள்ளது - இரண்டைக் குறிப்பிடுவதென்றால் 1995-ல் பிரான்சில் பரந்த வேலை நிறுத்தப் போராட்ட அலையும் இந்தோனேஷிய சர்வாதிகாரி சுகர்ட்டோவின் வீழ்ச்சியும் ஆகும்- இவை பூகோள முதலாளித்துவப் பொருளாதாரத்தினுள்ளே நிலையற்ற தன்மை அதிகரித்து வருவதன் அறிகுறிகளாகும்.

1990களின் தசாப்தம் சோசலிசத்தின் தோல்வி மற்றும் சந்தையின் வெற்றி பற்றிய பிரகடனம் செய்யும் சூத்திரங்களுக்கு திறக்கப்பட்டது. ஆனால் இவ்வெற்றியானது குறுகிய வாழ்வு கொண்டதாகவே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. கடந்த பத்தாண்டு வரிசைக்கிரமமான நிதி மற்றும் பொருளாதார நெருக்கடிகளைக் கண்டிருக்கின்றது -ஸ்காண்டிநேவியன் வங்கிகளின் நெருக்கடியைத் தொடர்ந்த 1992ல் ஐரோப்பிய நாணயமாற்று வீத தொழிற்பாட்டின் சீர்குலைவு, 1994-95ல் 50 பில்லியன் டாலர் மெச்சிக்கன் பிணை எடுப்பைத் தொடர்ந்து 1994-ன் பங்குப்பத்திர சந்தைக் குழப்பம், பூகோள நிதியமைப்பு முறையின் நெருக்கடியாய் விரைவில் மாறிய 1997-98ன் ஆசிய நிதி நெருக்கடி என்று



படிப்பகம்

www.padippakam.com

கூறப்படுவது ஆகியனவாகும். இப்போது புதிய நிதிப் புயல்கள் முதலாளித்துவ அமைப்பின் இதயத்தில், அமெரிக்க நிதிச் சந்தைகளில் கடன் மற்றும் ஊக வாணிபத்தின் முக்கியப் பகுதியில் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

சியாட்டிலில் உலக வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் பிரதான முதலாளித்துவ சக்திகள் எந்தவித உடன்பாட்டிற்கும் வர இயலாமற் போனதைப் போலவே, இந்த நிதி வெடிப்புக்கள் உறுதியாய் பூகோள முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நடந்துகொண்டிருக்கும் நிலை முறிவின் அடையாளங்களாகும். இந்த நிலைமுறிவு முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்று அழைக்கப்படுவனவற்றிலும் ஆழமான சமூகப் போராட்டங்களை ஒரே மாதிரியாய் உண்டு பண்ணும். ஆனால் தீர்க்கமான கேள்வி எந்த வேலைத்திட்டத்தின் மீது இந்த இயக்கம் வளர்ச்சி அடையும் என்பதுதான். எல்லா வகை பகுதி மற்றும் தனிப்பட்ட விஷய கோரிக்கைகள் பாத்திரத்தை ஆற்றும், சந்தேகமில்லை. ஆனால் இந்தப் போராட்டங்கள், அவற்றின் மிகவும் முன்னேறிய சக்திகளுக்கு தெளிவாகத் தயாரிக்கப்பட்ட சர்வதேசிய முன்னோக்கு வழிகாட்டக்கூடிய மட்டத்திற்கு மட்டுமே முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதற்கு இருபதாம் நூற்றாண்டின் அரசியல் படிப்பினைகளை -எல்லாவற்றுக்கும் மேலாக 1917-ன் ரஷ்யப் புரட்சியின் விளைபொருள் மற்றும் இயல்பின் வரலாற்றுப் புரிதலை உட்கிரகித்தல் தேவைப்படுகிறது.

ரஷ்யப்புரட்சி -1870 லிருந்து 1914 வரை முதலாளித்துவ பூகோளமயமாக்கலின் முதல் கட்டத்தால் தயாரிக்கப்பட்ட புறநிலை ரீதியான பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளுக்கு- சோசலிச அடித்தளங்களின் மீது சமுதாயத்தை மறு நிர்மாணம் செய்வதற்கான முதலாவது முயற்சியாக இருந்தது. லெனின் மற்றும் ட்ரொட்ஸ்கியின் போல்ஷேவிக் கட்சித் தலைமையும் முதலாளித்துவத்தை முதலாவதாக வீழ்த்தப் பொறுப்பெடுத்த தொழிலாளர்களும், ரஷ்யாவில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது அத்தோடு முடிந்துவிடுவதல்ல, மாறாக இன்னும் சொல்லப்போனால் பரந்த புறநிலையை -உலக சோசலிசப் புரட்சியை நோக்கிய முதல் அடி என்ற புரிதலினால் தூண்டப்பட்டும் வழிநடத்தப்பட்டும் இருந்தார்கள்.

சமுதாயத்தை சோசலிச மறுநிர்மாணம் செய்தலின் முதலாவது முயற்சி இறுதியில் தோல்வி அடைந்தது. புரட்சி தனிமைப்பட நேர்ந்ததோடு அது பரவத் தவறியது, ஸ்ராலினிச அதிகாரத்துவம் வடிவிலும் மற்றும் அதன் "தனியொரு நாட்டில் சோசலிசம்" எனும் முன்னோக்கு வடிவிலும் ஆபத்தான தேசிய பிற்போக்கின் தோற்றத்திற்கான சூழ்நிலைகளை உண்டுபண்ணியது.

அதனைத் தொடர்ந்த ஆண்டுகளில் சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் தலைமையானது, முதலில் சமூக ஜனநாயகத்தாலும் பின்னர் ஸ்ராலினிசம் மற்றும் நாஜிசத்தாலும் படுகொலை செய்யப்பட்டதன் ஊடாக சர்வதேசத் தொழிலாள வர்க்கத்திற்கு பயங்கரமான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. ரஷ்யப் புரட்சியின் சீரழிவும் அதன் தலைமை படுகொலை செய்யப்பட்டமையும் தொழிலாள வர்க்கத்தினுள் பெரும் குழப்பத்தைத் தோற்றுவித்தவேளை, மார்க்சிசம் மற்றும் கம்யூனிசத்தின் பேரில் மிகவும் படுபாதகமான குற்றங்கள் நிறைவேற்றப்பட்டன.

சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துக்குள்ளே தத்துவார்த்த மற்றும் அரசியல் சீரழிவின் விளைவாக உண்டு பண்ணப்பட்ட சூழ்நிலைகள் -சமூக சீர்திருத்த வாதம் மற்றும் ஸ்ராலினிசம்- அதைப் போலவே மாவோயிசம் மற்றும் கெரில்லாயிசம் போன்ற விவசாயியை அடிப்படையாகக் கொண்டதும் குட்டி முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்டதுமான இயக்கங்களுடன் தொடர்பு கொண்ட- பல்வேறு தேசியவாதக் கோட்பாடுகளின் மேலாதிக்கத்திற்கான சூழ்நிலைகளை உண்டுபண்ணின.

இந்த நிகழ்ச்சிப்போக்கு தொழிலாள வர்க்கத்துடன் அரசியல் வழிவிலகலை வாரிசாக விட்டுச் சென்றுள்ளது. ஆனால் சர்வதேச சோசலிச இயக்கத்தைப் புதுப்பிக்கவும்



படிப்பகம்

www.padippakam.com

சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தை மறுநோக்கு நிலைப்படுத்தவும் மற்றும் தெளிவூட்டவும் அதற்கு அரசியல் கற்பிக்கவும் ஏற்ற புறச் சூழ்நிலைகள் தோன்றுகின்றன. ரஷ்ய புரட்சியானது முதலாளித்துவ பூகோள மயமாக்கலின் முதலாவது கட்டத்தின் விளைபொருளாக இருந்தால், பின்னர் கடந்த 25 ஆண்டுகளாக வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் மேலும் உக்கிரமடைதலானது புதிய புரட்சிகர எழுச்சிகளை நிச்சயமாக உண்டு பண்ணும்.

வரலாற்றின் சக்கரங்கள் அனைத்தையும் மிக மெதுவாகவே அரைக்கின்றன என்று சிலவேளை கூறப்படுகிறது. இந்த உணர்ச்சிகளின் மீது தன்னைத் தளப்படுத்திக் கொண்டு குட்டி முதலாளித்துவ சந்தர்ப்பவாதமானது, தொழிலாள வர்க்கத்தினுள் புரட்சிகரத் தலைமையைப் படிப்படியாய்க் கட்டி எழுப்பும் நீண்ட போராட்டத்திற்கு எதிராக புதிய வழிகளை, குறுக்கு வழிகளை மற்றும் உடனடி "பலன்கள்" ஆகியவற்றை வழங்குகிறது. வரலாற்று நிகழ்ச்சிப்போக்கானது சில வேளைகளில், மெதுவாக நிகழ்வதுபோல தோன்றுமாயின் அது எப்பொழுதும் மிகவும் முழுமை பெற்றதாக இருக்கும். மக்கட்திரளை முன்னேற்றுவதற்காக வழங்கப்பட்டதாக உரிமை கோரும் அனைத்து தேசியவாத வேலைத்திட்டங்களும் "ஒன்றின் மேல் ஒன்று இல்லாமல்" தரை மட்டமாகியுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் நிகழ்வுகளின் சோதனையில் நின்று பிடிக்கும் ஒரே வேலைத்திட்டம் லியோன் ட்ரொட்ஸ்கியால் வளர்த்தெடுக்கப்பட்டதும் இன்று அனைத்துலகக் குழுவின் தலைமையின் கீழ் நான்காம் அகிலத்தால் முன்னெடுத்துச் செல்லப்படுவதுமான சர்வதேச சோசலிச முன்னோக்கு ஆகும். இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சர்வதேச தொழிலாளர் இயக்கத்தை மறு கல்வியூட்டவும் மறு ஒழுங்கமைக்கவுமான குவிமையப் புள்ளி *உலக சோசலிச வலை தளம்* ஆகும் என்பதில் நாம் நம்பிக்கையுடன் இருக்கிறோம். நமது காலத்திய சவால்களை எதிர்கொள்ள கட்டாயம் முகம் கொடுத்தாக வேண்டிய தீர்க்கமான அரசியல் பிரச்சனைகளின் மீதான கலந்துரையாடலை திறந்து விட்டதற்காக, நாம் பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியினால் வழங்கப்பட்ட பங்களிப்பை வரவேற்கிறோம்.

குறிப்புகள்:

1. லியோன் ட்ரொட்ஸ்கி, எழுத்துகளில் தேசியவாதமும் பொருளாதார வாழ்க்கையும் 1933-34, பக்கம் - 158

2. லியோன் ட்ரொட்ஸ்கி, அதே நூல். மேற்கோள் பக்கம் - 159

3. ரொனால்ட் ஹெ ச். கோஸ், பொருளாதாரத்தில் நிறுவனத்தின் இயல்பு 4, 1937, ஹெ ன் ஊட்ஸின் வால்ஸ்ரீட்டில் மேற்கோள் காட்டப்பட்டது, பக்கம் - 249.



படிப்பகம்